தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண்: 421

ஆற்றுப்படைத் தொகுதி

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

2000] [விலை. ரூ. 45—00

சரசுவதி மகால் நூலக வெளியீடு எண்.421

ஆற்றுப்படைத் தொகுதி

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் திருமதி **சத்தியபாமா காமேஸ்வரன்,**
விரிவுரையாளர்,
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி,
தஞ்சாவூர் - 613 007

தஞ்சாவூர் மகாராசா சரபோசியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர் - 613 009

2000

விலை : ரூ.45-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	**ஆற்றுப்படைத்தொகுதி**
பதிப்பாசிரியர்	:	முனைவர் திருமதி **சத்தியபாமா காமேஸ்வரன்**
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்.
வெளியீட்டு எண்	:	421
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	செப்டம்பர், 2000
தாள்	:	10.9 கி.கி. சேஷசாயி
நூல் அளவு	:	19 x 25 cm
பக்கங்கள்	:	96
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சு மற்றும் ஒளி அச்சுக்கோப்பு, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	இலக்கியம்
விலை	:	ரூ. 45-00

பொருளடக்கம்

1.	வெளியீட்டாளர் முகவுரை	v - vi
2.	பதிப்புரை	vii -viii
1.	ஆற்றுப்படை	1
2.	சுவடிச் செய்திகள்	5
3.	**முருகன்**	
1.	முருகன் வழிபாடு	13
2.	முருகனின் பிறப்பு	15
3.	முருகனின் பல்வேறு பெயர்கள்	16
4.	முருகனின் உருவப் பொலிவு	19
5.	அறுபடை வீடுகள்	24
6.	முருகப் பெருமானின் திருமணங்கள்	25
7.	சூரனை அழித்தல்	28
8.	கிரௌஞ்சனை அழித்தல்	31
9.	கெசமுகாசுரனை அழித்தல்	31
10.	முருகப்பெருமானும் திருஞான சம்பந்தரும்	32
11.	அடியார்களின் வேண்டுதல்	34
4.	**ஆற்றுப்படை நூல்கள் (மூலமும் உரையும்)**	
1.	அணி முருகாற்றுப்படை	1
2.	அருள் முருகாற்றுப்படை	8
3.	இயல் முருகாற்றுப்படை	12
4.	சேய் முருகாற்றுப்படை	18
5.	பொரு முருகாற்றுப்படை	22
6.	வரு முருகாற்றுப்படை - I	24
7.	வேல் முருகாற்றுப்படை - II	38
8.	ஒரு முருகாற்றுப்படை	45
5.	துணை நூல் பட்டியல்	47
6.	சொல்லடைவு	I- VIII

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே **'நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்'** என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
24.9.2000.

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

வெளியீட்டாளர் முகவுரை

உலகப் புகழ் பெற்ற சரசுவதி மகால் நூலகம் சுவடிகளிலிருந்து, பல நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றது. இதுவரை சரசுவதி மகால் நூலகம் தமிழ், தெலுங்கு, வடமொழி, மராட்டி ஆகிய மொழிகளைச் சேர்ந்த 421 நூல்களை வெளியிட்டுள்ளது.

இந்நூலகத்தின் நூல் வெளியீட்டு வரிசையில் தற்போது **'ஆற்றுப்படைத் தொகுதி'** என்னும் இந்நூல் சுவடியிலிருந்து பதிப்பித்து வெளியிடப்படுகின்றது.

தமிழில் ஆற்றுப்படை என்னும் இலக்கிய வகை சங்க காலம் தொடங்கி ஆளப்பட்டு வருகின்றது. பக்திப் பொருளில் அமைந்த சில சுவடிகளின் அடிப்படை நூல்களைத் தொகுத்து இந்நூலகச் சுவடிகளின் அடிப்படையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூலை நன்முறையில் பதிப்பித்துள்ள சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் முனைவர் **சத்தியபாமா** அவர்களுக்கு என் பாராட்டுக்கள். இந்நூல் வெளியீட்டு நிதியுதவியை நல்கியுள்ள நடுவண் அரசுக்கு என் நன்றியை

உரிதாக்குகின்றேன். இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் **திரு. சாமி. சிவஞானம்** அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. **அ. பஞ்சநாதன்** அவர்களுக்கும் நூல் வெளிவரத் துணைநின்ற ஏனையோருக்கும் என் பாராட்டுக்கள்.

இலக்கிய ஆர்வலர்கள் இந்நூலை பெரிதும் வரவேற்பர் என நம்புகின்றேன்.

தஞ்சாவூர்,
25 .09.2000.

மூ. இராசாராம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

பதிப்புரை

காலத்தால் பழமையான சிற்றிலக்கிய வகையுள் ஒன்றாக விளங்குவது ஆற்றுப்படை இலக்கியம். சங்க இலக்கியங்களுள் பத்துப்பாட்டில் முதலாவதாக அமைந்துள்ள திருமுருகாற்றுப்படை, முருகனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு, ஆற்றுப்படை நூல்களுள் தலையாயதாக விளங்குகிறது.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் 1282 சுவடி எண் கொண்ட ஓலைச்சுவடி, முருகனைப் பற்றிய ஏழு ஆற்றுப்படை நூல்களின் தொகுப்பாக இருப்பதைக் காண நேர்ந்தது. மேலும் இந்நூலகத்தில் 1787 சுவடி எண் கொண்ட ஓலைச்சுவடியில் இந்த ஏழு ஆற்றுப்படை நூல்களில் இல்லாத ஒரு முருகாற்றுப்படை என்ற நூலும் மற்றும் மூன்று ஆற்றுப்படை நூல்களும் இருந்தன. 696 சுவடி எண் கொண்ட ஓலைச்சுவடியில் வருமுருகாற்றுப்படை என்ற நூலும் இருந்தது.

அணி முருகாற்றுப்படை, அருள் முருகாற்றுப்படை இயல் முருகாற்றுப்படை, செய முருகாற்றுப்படை, பொரு முருகாற்றுப்படை, வரு முருகாற்றுப்படை, வேல் முருகாற்றுப்படை, ஒரு முருகாற்றுப்படை ஆகிய ஆற்றுப்படை நூல்கள் பெயர்கள் புதியனவாக இருந்தமையால், பல நூலகங்களிலும் இந்நூல்கள் கிடைக்கின்றனவா என்று தேடியபொழுது கிடைக்கவில்லை. ஆகவே, இந்நூல் பதிப்பிக்க தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்நூலுக்கு முன்னுரை எழுத, முருகன் தொடர்பான பல்வேறு நூல்களைத் தேடியபொழுது, இந்நூலக வெளியீடாக வந்துள்ள, புலவர் வீ. சொக்கலிங்கம் அவர்கள் பதிப்பித்த 'முருகர் கதம்பம்' என்ற நூலில் '**வருமுருகாற்றுப்படை**' என்ற நூல் அச்சாகி இருந்ததைக் காணமுடிந்தது. இந்த ஆற்றுப்படையை அன்றி, இத்தொகுப்பிலுள்ள அணிமுருகாற்றுப்படை அச்சாகியுள்ளது என்று சிலரால் கூறப்பட்டதால், தேடியபொழுது கிடைக்கவில்லை. இந்த அணிமுருகாற்றுப்படை, வருமுருகாற்றுப்படை ஆகிய நூல்கள் அச்சேறியிருப்பினும் மற்ற ஐந்து நூல்களும் அச்சேறாத நூல்கள் என்பதால் பதிப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

முதலில் ஆற்றுப்படை இலக்கிய வகைகளுக்கு உரிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அதன் பின்பு இந்நூல் அமைந்துள்ள ஓலைச் சுவடிகளைப் பற்றி செய்திகளும், ஒப்பீடு செய்வதற்கு பெரிதும் உதவிய சென்னைஅரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக, ஆற்றுப்படை அமைந்துள்ள ஓலைச்சுவடிகளைப் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இச்சுவடிகளை ஒப்பிட்டதன் மூலம் 1282 சுவடி எண் கொண்ட ஓலைச்சுவடியில் உள்ள ஏழு ஆற்றுப்படை நூல்களைத்தவிர அச்சேறாத மற்றொரு வருமுருகாற்றுப்படை மற்றும் ஒரு முருகாற்றுப்படை ஆகிய நூல்களைப் பற்றியும் அறிந்து கொள்ளமுடிந்ததால், ஒன்பது ஆற்றுப்படை நூல்களின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

'**ஆற்றுப்படைத் தொகுதி**' என்ற இந்நூலைப் பதிப்பிக்கும் பணிக்கு அனுமதியளித்து, பதிப்பிக்க வழிவகுத்துத் தந்த தஞ்சை சரசுவதி மகால் நூலக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் **டாக்டர் மூ. இராசாராம், இ.ஆ.ப.,** அவர்களுக்கும், இந்நூலைப் பதிப்பிக்க ஊக்கம் அளித்த சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் **திரு. சாமி. சிவஞானம்** அவர்களுக்கும், பதிப்புத் துறை மேலாளர் **திரு. அ. பஞ்சநாதன்** அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். இந்நூல் பதிப்பின் பொழுது உதவிய தமிழ்த்துறைப் பண்டிதர்கள் **திருமதி. ச. திலகம்** அவர்களுக்கும், **திரு. ய. மணிகண்டன்** அவர்களுக்கும், இந்நூலுக்கு உரை எழுத உதவிய முனைவர் திருமதி **திலகவதி குமரன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்றுப்படைச் சுவடிகளை ஒப்பிடுவதற்கு அனுமதியளித்து, செம்பதிப்பாக வெளிவர உதவிய சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் காப்பாட்சியர் **முனைவர் சௌந்தரபாண்டியன்** அவர்களுக்கும், அச்சில் ஏறும் வரை பலதிருத்தங்கள் செய்தபொழுதும் பொறுமையோடு ஒளிஅச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு செய்த **திரு. க. பத்மநாபன்** அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

தஞ்சாவூர்,
23-09-2000.

கா. சத்தியபாமா ,
சிறப்புக் கேண்மைப்பதிப்பாசிரியர்.

ஆற்றுப்படை

தமிழ் இலக்கியச் செல்வத்துள் சிற்றிலக்கியங்களும் அடங்கும். சிற்றிலக்கியங்களைச் சிறுபிரபந்தங்கள் என்றும் சில்லறைப் பிரபந்தங்கள் எனவும் குறிப்பிடுவர். பிரபந்தம் என்ற சொல்லுக்கு நன்கு கட்டப்பட்ட நூல் என்பது பொருள். சிறு பிரபந்தங்களைச் சிற்றிலக்கியங்கள் என்னும் செந்தமிழ்ச் சொல்லால் குறிப்பிட்டனர்.

தமிழில் உள்ள சிற்றிலக்கியங்களைத் தொண்ணூற்றாறு என்னும் தொகையில் அடக்கிக் கூறுவது ஒரு மரபு. பிரபந்த தீபிகை, பிரபந்த மரபியல், சதுரகராதி, சிவந்தெழுந்த பல்லவராயன் உலா முதலான நூல்களில் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்னும் வரையறை குறிப்பிடப் பெற்றுள்ளது. இன்று தொண்ணூற்றாறுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்களாகப் பெருகியுள்ளது கண்கூடு. இத்தகைய சிற்றிலக்கிய வகையுள் செல்வாக்குப் பெற்றுள்ள சிற்றிலக்கியங்களுள் ஒன்றாக விளங்குவது **ஆற்றுப்படை** இலக்கியம்.

ஆற்றுப்படை - இலக்கணம்

ஆறு என்னும் சொல்லுக்கு **வழி** அல்லது **நெறி** என்பது பொருளாகும். **ஆற்றுப்படுத்துதல்** என்றால் **அறிந்தவன்** ஒருவன் **அறியாதான்** ஒருவனை வழிப்படுத்துதலாகும். (ஆறு - வழி; படை - படுத்துதல்) இக்கருத்தினை,

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பொருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கம்[1]

என்றதொல்காப்பிய நூற்பாவினால் அறியலாம்.

புரவலன் ஒருவனிடம் பரிசில் பெற்ற மகிழ்ச்சியோடு திரும்பிய பாணரும், கூத்தரும், பொருநரும், விறலியரும் வறுமையால் வாடும் தம்மையொத்தவர்கள் வழியில் எதிர்ப்பட்டபோது, அவர்களும் தாம்பெற்ற பொருளின்பத்தைப் பெற வேண்டும் என்ற விருப்பத்தோடு தமக்குப் பரிசில் பழங்கிய புரவலனை அடைவதற்குரிய வழிகளையும், அப்புரவலனின் நாடு, ஊர், புகழ், கொடை முதலியவற்றையும் கூறி, பாராட்ட வேண்டிய

[1]தொல்காப்பியம் ; பொருளதிகாரம் ; நூற்பா 91.

முறைகளையும், அவர் பரிசில் வழங்கும் பாங்கினையும் பிற செய்திகளையும் கூறி, அவனை ஆற்றுப்படுத்துதலே ஆற்றுப்படையின் பொது இலக்கணம்.

''புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தொறும் இருங்கா னத்திடை
வறுமை யுடன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவலன் நாடூர் பெயர்கொடை பராஅய்
ஆங்குநீ சொல்கென விடுப்பதாற் றுப்படை ''[2]

என்று புரவலனிடமிருந்து பொருள்பெறும் இரவலர்களான பாணர், கூத்தர், பொருநர், விறலியர் இவர்களோடு புலவரையும் இணைத்துப் பகிர்கிறது பன்னிரு பாட்டியல். மேலும் ஆற்றுப்படை இலக்கியத்தின் யாப்பமைப்பை இந்நூல்,

'' ஓங்கிய அதுதான் அகவலின் வருமே ''[3]

என்று எடுத்துரைக்கிறது. ஆற்றுப்படை இலக்கணத்ததை,

'' ஆற்றுப் படையே அகவல் பாவால்
விறலி பாணர் கூத்தரில் ஒருவர்
பரிசுக்குச் சென்ற பாவலர் புகழும்
கொடையும் கொற்றமும் வழியிடைக் கூறலே ''[4]

என்று பிரபந்த தீபமும்,

'' புலவர்கள் வாழ்த்துநலம்
நிறைந்த பொருநரைப் பாணரைக் கூத்தரை நீள்நிதியம்
பெறும்படி ஆற்றுப்படுப்பன ஆசிரி யம்பெறுமே ''[5]

என்று நவனீதப் பாட்டியலும் கூறுகின்றது. புறப்பொருள் வெண்பா மாலையில் பாடாண் படலத்துள்,

சேணோங்கிய வரையதரிற் பாணனை ஆற்றுப்படுத்தன்று
ஏற்றிச் சென்ற இரவலன் கூத்தரை ஆற்றுப்படுத்தன்று
பெருநல்லான் உழையீராகெனப் பொருநனை அற்றுப்படுத்தன்று
திறல் வேந்தன் புகழ்பாடும் விறலியை ஆற்றுப்படுத்தன்று[6]

இருங்கண் வானத்து இமையோர் உழைப்
பெரும்புலவனை ஆற்றுப்படுத்தன்று[7]

2. பன்னிரு பாட்டியல் : நூற்பா 320 5. நவநீதப்பாட்டியல் : 53
3. ,, : நூற்பா 321 6. புறப்பொருள் வெண்பா மாலை : பாடாண் படலம் 216 (கொளு)
4. பிரபந்த தீபம் : நூற்பா 290 7. ,, : ,, ,, 230 (கொளு)

எனவரும் கொளுச் செய்யுட்களில் பாணாற்றுப்படை, கூத்தறாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விரலியாற்றுப்படை, புலவராற்றுப்படை ஆகிய ஆற்றுப்படை நூல்களின் இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.

சங்ககாலப் புலவர்களால் இந்த ஆற்றுப்படை இலக்கியம் போற்றி வளர்க்கப்பட்டது. மாணாக்கர் ஆற்றுப்படை, ஆசிரியர் ஆற்றுப்படை, தமிழ்மகள் ஆற்றுப்படை, காதலியாற்றுப்படை எனக் காலத்திற்கேற்பப் புதுப்பொருளுக்கு இடமளிப்பவையாக ஆற்றுப்படை நூல்கள் பெருகி வருகின்றன. இவை, பண்டைய ஆற்றுப்படை இலக்கண அமைதியோடு காணப்படாவிட்டாலும், காலத்தின் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் வழிப்படுத்துதல் என்ற பண்பு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன எனலாம்.

பத்துப்பாட்டில் ஆற்றுப்படை இலக்கியங்கள்

காலத்தால் முந்தியவையாகவும் சுவை செறிந்தவையாகவும் விளங்கும் ஆற்றுப்படை நூல்கள் பத்துப்பாட்டால் சரிபாதி இடத்தைப் பெற்றுள்ளன. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை அல்லது மலைபடுகடாம் ஆகிய ஐந்தும் ஆற்றுப்படை இலக்கியங்களாகும். இவற்றுள் மிகப் பெரிதான மலைபடுகடாம் 583 பாடலடிகளைக் கொண்டு விளங்குகிறது. பொருநராற்றுப்படை, ஆற்றுப்படை இலக்கியங்களில் காலத்தால் பழமையானதாக விளங்குகிறது. புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய புறப்பொருள் நூல்களிலும் ஆற்றுப்படைச் செய்யுள்களைக் காண முடிகின்றன. மேலும் பிற்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியமான கலம்பகத்தில் ஆற்றுப்படை பதினெட்டு உறுப்புகளில் ஒன்றாக விளங்குகிறது. மற்றும் சில தனிப்பாடல்களில் ஆற்றுப்படைப் பாடல்கள் அமைந்துள்ளன.

ஆற்றுப்படை - பாடுபொருள்

ஆற்றுப்படை நூல்களில் திருமுருகாற்றுப்படையைத் தவிர மற்ற ஆற்றுப்படை நூல்களில் மன்னர்களையும் வள்ளல்களையுமே பாட்டுடைத் தலைவராக வைத்துப் பாடப் பெற்றுள்ளன. இந்த ஆற்றுப்படை நூல்களில் பாட்டுடைத் தலைவனின் குலப்பெருமை, அறச்சிறப்பு, வீரச்சிறப்பு முதலியவைகளும் அவன் நாட்டிற்குச் செல்லும் வழிகளைப் பற்றிய செய்திகும் இறுதியில் அவனிடத்தில் பெறத்தக்க பரிசில் வகைகளையும் பற்றிக் குறிப்பிடுவனவாக உள்ளன.

திருமுருகாற்றுப்படை - தனித்தன்மை

பத்துப்பாட்டு நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பகுதியைப் போல முதல் நூலாக அமைந்து விளங்குவது திருமுருகாற்றுப்படை. இது 315 அடிகளை உடைய ஆசிரியப்பா.

இதனை இயற்றியவர் மதுரை கணக்காயர் மகனார் நக்கீரர். இவர் சங்க காலத்திற்குப் பின்னே தோன்றியவர் என்பது ஐயத்திற்கு இடமின்றி நிறுவப்பட்டுள்ளது. சங்க காலத்திற்குப்பின் தோன்றியவர் எழுதிய நூல் என்றாலும் இறைவழிபாட்டு நூலாதலால், இதைப் பத்துப்பாட்டில் முதலில் அமைத்தனர்.[6]

திருமுருகாற்றுப்படை, தொல்காப்பியர் கூறும் இலக்கணத்திற்கு மாறுபட்டது. தொல்காப்பிய இலக்கணப்படி ஆற்றுப்படை என்பது உலகியல் வாழ்வு பற்றியதாகும். திருமுருகாற்றுப்படையோ ஆன்மீக வாழ்வு பற்றியதாகும். தொல்காப்பியர் நிலையற்ற பொருளைப் பெறுவதற்காகக் கூத்தர், பாணர், பெருநர், விறலியர் ஆகிய நால்வகையினரே ஆற்றுப்படுத்துவதற்கு உரியவர் என்று கூற, நக்கீரர் முருகனருளைப் பெறப் புலவனை ஆற்றுப்படுத்துவதாகப் பாடியுள்ளார். ஏனைய ஆற்றுப்படை நூல்கள் மானிடரைத் தலைவனாகக் கொண்டிருக்க, திருமுருககாற்றுப்படை முருகனாகிய தெய்வத்தைத் தலைவனாகக் கொண்டுள்ளது. முருகனின் சிறப்பு, வீரம், அவன் குடிகொண்டுள்ள அறுபடை வீடுகளின் பெருமை முதலிய செய்திகள் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளன.

பெயர் அமைவு முறையிலும் இந்நூல் தனித்தன்மை உடையதாக விளங்குகிறது. யார் ஆற்றுப்படுத்தப்படுகிறார்களோ அவர்கள் பெயரால் ஆற்றுப்படை நூல்கள் பெயர் பெற்று விளங்குகின்றன. கூத்தரை ஆற்றுப்படுத்தும் நூல், கூத்தராற்றுப்படை என்றும், பொருநரை ஆற்றுப்படுத்தும் நூல் பொருநராற்றுப்படை எனறும், பாணரை ஆற்றுப்படுத்தும் நூல் பாணாற்றுப்படை என்றும் பெயர் பெறும். திருமுருகாற்றுப்படை யாரிடம் ஆற்றுப்படுத்தப் படுகின்றாரோ அத்தலைவனின் பெயரால்- முருகனின் பெயரால் பெயர் பெற்றுள்ளது. எனினும் மரபு முறைப்படி இதனைப் புலவராற்றுப்படை என வழங்கியதும் உண்டு என்பது குறப்பிடத்தக்கது.

பிற ஆற்றுப்படை நூல்களில் பரிசிலை பெற விரும்பும் கலைஞரின் வறியநிலை பற்றிய வருணனைகள் உண்டு. திருமுருகாற்றுப்படையில் இத்தகைய வருணனைகள் இல்லை. மேலும் பிற ஆற்றுப்படை நூல்களில் ஆற்றுப்படுத்தப்படுவோன் தான் முன்பு இருந்த நிலையையும், பரிசில் பெற்றபின் அடைந்த புது வாழ்வையும், பரிசில் பெற்ற முறையையும் விரித்துக் கூறுவதைக் காணமுடிசிறது. திருமுருகாற்றுப்படையில் இவை அமையவில்லை.

இந்நூலில் சிறப்பினை அறிந்து, இதனை ஆன்றோர் பதினோராவது திருமுறையில் அமைந்துள்ள நூல்களுள் ஒன்றாகச் சேர்த்துள்ளனா. இதிலிருந்து இந்நூலின் சிறப்பை அறிய முடிகிறது.

---

[6]பூவண்ணன், இலக்கிய வரலாறு, ப.59.

2. சுவடிச் செய்திகள்

இந்த ஆற்றுப்படைத் தொகுதி,

1. பொரு முருகாற்றுப்படை
2. அணி முருகாற்றுப்படை
3. வரு முருகாற்றுப்படை
4. இயல் முருகாற்றுப்படை
5. சேய் முருகாற்றுப்படை
6. அருள் முருகாற்றுப்படை
7. வேல் முருகாற்றுப்படை

ஆகிய ஏழு ஆற்றுப்படை நூல்களையும் ஒரு முருகாற்றுப்படை என்ற ஒரு ஆற்றுப்படை நூலையும் சேர்த்துத் தொகுக்கப்பெற்ற தொகுப்பு நூலாகும். தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் ஓலைச் சுவடிகளாகப் பாதுகாக்கப் பட்டுவ்ருவனவற்றுள் ஏழு ஆற்றுப்படை நூல்கள் முறையே, சுவடி எண்.1282 (g), 1282 (h), 1282(i), 1282 (j), 1282 (k), 1282 (l), 1282 (m), ஆக அமைந்துள்ளன. இவை அனைத்தும் ஒரே சுவடிக்கட்டில் அமைந்துள்ளன. இவற்றைத்தவிர இந்நூலகத்தில் சுவடி எண்.1787 இல் ஒரு முருகாற்றுப்படை என்ற நூல் காணப்படுவதால் இத்தொகுதியில் இந்நூல் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நூலில் சில இடங்கள், வருமுருகாற்றுப்படை ஒத்ததாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நூல்களின் பெயர்களின் அகரவரிசையின் அடிப்படையில்,

1. அணி முருகாற்றுப்படை
2. அருள் முருகாற்றுப்படை
3. இயல் முருகாற்றுப்படை
4. சேய் முருகாற்றுப்படை
5. பொரு முருகாற்றுப்படை
6. வரு முருகாற்றுப்படை
7. வேல் முருகாற்றுப்படை

என்று வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒருமுருகாற்றுப்படை 1787 என்ற எண்ணுள்ள வேறொரு சுவடியில் காணப்பட்டதாலும் வருமுருகாற்றுப்படையில் காணப்படும் பாடலடிகள் பல இந்நூலில் பயின்று வருவதாலும் இந்நூலின் இறுதியில் அமைக்கப்பட்டள்ளது. இத்தொகுப்பில் ஆறாவது நூலாக அமையும் வருமுருகாற்றுப்படை என்ற பெயரில் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் ஒரு நூல் (சுவடி எண். ஆர்.எண். 10485) கிடைத்தது. இந்நூல் முற்றிலும் மாறுபட்ட வருமுருகாற்றுப்படை நூலாக இருந்ததால் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் சவடி எண்.1282 (1), இல் அமைந்திருந்த வருமுருகாற்றுப்படை நூல், வருமுருகாற்றுப்படை- I என்றும், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள வருமுருகாற்றுப்படை நூல், வருமுருகாற்றுப்படை - II என்றும் குறிக்கப்பட்டுள்ளன. எனவே, நூல்வரிசை,

1. அணி முருகாற்றுப்படை
2. அருள் முருகாற்றுப்படை
3. இயல் முருகாற்றுப்படை
4. சேய் முருகாற்றுப்படை
5. பொரு முருகாற்றுப்படை
6. வரு முருகாற்றுப்படை - I
7. வரு முருகாற்றுப்படை - II
8. வேல் முருகாற்றுப்படை
9. ஒரு முருகாற்றுப்படை

என்று அமைக்கப்பட்டுள்ளது.

சுவடி ஒப்பீடு

சுவடிப் பதிப்பு நெறிமுறைகளில் இன்றியமையாதது சுவடிகளை ஒப்பிடும் பணியாகும். ஒரு சவடியிலிருந்து தூய படியினை உருவாக்கிய பிறகு அதே நூலுக்குரிய பிற சுவடிகளோடு ஒப்பிடுதல் வேண்டும். அவற்றை அடிக்குறிப்பில் சுட்டவேண்டும்.

எழுதுவதற்குத் துணையாயிருந்த மூலச் சுவடியில் பிழை, விடுபட்டது, விளங்காதது, எழுத்துத் தெளிவின்மை, ஓலைமுறிவு போன்றவற்றால் ஐயம் ஏற்பட்ட இடங்கள் இப்பாட வேறுபாடுகளால் திருத்தம் பெறும். ஆகவே சுவடி ஒப்பிடும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்நூலகத்தில் சுவடி எண்.1787 இல் அமைந்துள்ள நூலில் வருமுருகாற்றுப்படை, அணி முருகாற்றுப்படை, மந்திர ஆற்றுப்படை, ஒரு முருகாற்றுப்படை முதலான நூல்களும் சுவடி எண்.696 d இல் அமைந்துள்ள வரு முருகாற்றுப்படைச் சுவடியும் பதிப்பிக்கும்போது ஒப்பிட உதவின. மேலும் சென்னை

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் இயல் முருகாற்றுப்படை (ஆர்.எண்.9825), எதிர் முருகாற்றுப்படை (ஆர்.எண்.5364), சேய் முருகாற்றுப்படை (ஆர்.எண்.9825) அணி முருகாற்றுப்படை (ஆர். எண்.5364, ஆர்.எண். 9823, ஆர்.எண்2977), வருமுருகாற்றுப்படை (ஆர்.எண்.10485) ஆகிய சுவடிகள் ஒப்பீடு செய்வதற்குக் கிடைத்தன. இவற்றில் மூலச்சுவடியில் உள்ள நூல்தலைப்பு முதற்கொண்டு, முற்றிலும் மாறுபட்ட வடிவம் வரையிலான வேறுபாடுகள் காணப்பட்டன.

1. 1282 (b) என்ற சுவடி எண்ணில் உள்ள வேல் முருகாற்றுப்படை என்னும் நூல், சுவடி எண்.1787, சுவடி எண். ஆர்.2977, சுவடி எண்.5364, சுவடி எண்9823 ஆகிய ஓலைச் சவடிகளில் அணி முருகாற்றுப்படை என்ற பெயரில் அமைந்துள்ளது.

2. 1282 (i) என்ற சுவடி எண் உள்ள வருமுருகாற்றுப்படை என்னும் நூல் ''**கருமுருகாருங் குழல்வள்ளி கேள்வன் கருதலரை**'' என்று தொடங்க, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் கிடைத்த வருமுருகாற்றுப்படை (ஆர்.எண்.10485) ''ஹரிஓம் ஆம் அய்யும் ஓம் கறீம்'' எனத் தொடங்குகிறது. ஒப்பீடு மூலமாக ஒரே தலைப்பில் அமைந்து இருப்பினும் இவை மாறுபட்ட வடிவங்கள் என்று கண்டுணரப்பட்டதால்,

வருமுருகாற்றுப்படை - I
வருமுருகாற்றுப்படை - II

என்று வேறுபடுத்தி காட்டப்பட்டுள்ளன.

3. 1282 (l) என்ற சுவடி எண்ணில் உள்ள அருள் முருகாற்றுப்படை என்னும் நூல், சுவடி எண்.5364 இல் எதிர் முருகாற்றுப்படை என்ற பெயரிலும் ஆர்.எண்.9825 இல் சேய் முருகாற்றுப்படை என்ற பெயரிலும் அமைந்துள்ளது.

4. 1282 (j) என்ற சுவடியில் உள்ள இயல் முருகாற்றுப்படை என்னும் நூல், சுவடி எண் 1787-ஈல் மந்திர ஆற்றுப்படை என்ற பெரில் அமைந்துள்ளது.

5. நூலுள் உள்ள பாடலடிகளோடு ஒப்பீடு செய்தபோது, பாடவேறுபாடுகள் பெருமளவில் கிடைத்தன. சான்றாக, 94 பாடலடிகளைக் கொண்ட வருமுருகாற்றுப்படையில் 55 பாடவேறுபாடுகள் கிடைத்தன. மேலும் ஒப்பீட்டின் மூலம், மூலத்தில் இல்லாத மாறுபாடுகளுடன் கூடிய பாடலடிகள் கிடைத்தன. இவை,

1. மூலத்தில் உள்ள பாடலடிகளுக்குப் பதிலியாக அமைத்த பாடலடிகள்.
2. மூலத்தில் இல்லாத, அதிகப்படியாக இருந்த பாடலடிகள்.

இவற்றாக ஒப்பீட்டின் மூலம் பலவேறுபாடுகளைக் கண்டதில் முடிந்தது. இவற்றுள் பாட வேறுபாடுகள் உரை எழுதும் போது பயனுள்ளவையாக அமைந்தன.

யாப்பமைப்பு

இந்த ஆற்றுப்படைத்தொகுதி முருகப் பெருமானின் தோத்திர நூலாக அமைந்துள்ளது. இந்நூலில் உள்ள ஒன்பது ஆற்றுப்படை நூல்களும் அகவற்பாவால் அமைந்திருப்பினும் பிழைகள் மலிந்து கிடக்கின்ற காரணத்தினாலும் சில நூல்களில் மந்திரச் சொற்கள் விரவி வருகின்ற காரணத்தினாலும் இலக்கண அமைவு பெறாது காணப்படுகின்றது. இவ்வாற்றுப்படைத் தொகுதி நூலில் உள்ள ஆற்றுப்படை நூல்களை மூல ஏட்டில் இருந்து எழுது பா வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுள், அருள் முருகாற்றுப்படை, சேய் முருகாற்றுப்படை, வரு முருகாற்றுப்படை, வேல் முருகாற்றுப்படை ஆகிய நான்கு ஆற்றுப்படை நூல்களும் இணைக்குறளாசிரியப்பாவைப் போன்று யாப்பமைப்பு உடையனவாக அமைந்துள்ளன.

ஆற்றுப்படைத் தொகுதி

ஆற்றுப்படைத் தொகுதி என்று பெயரிடப்பட்டு தொகுத்தமைக்கப்பட்ட இந்நூலில், ஒன்பது ஆற்றுப்படை நூல்கள் அமைந்துள்ளன. இவற்றுள் முதல் நூலாக அமைவது அணிமுருகாற்றுப்படையாகும். சவடி எண்.1282 இல் 7 ஆற்றுப்படை நூல்கள் அமைந்திருந்தன. அவற்றுள் ஒரே ஒரு நூலில் மட்டும் இதன் நூலாசிரியர் குறித்த அகச்சான்று காணப்படுகிறது. இத்தொகுதி நூலில் ஆறாவதுநூலாக அமைந்துள்ள வருமுருகாற்றுப்படை- I நூலில்,

> கருமுரு காருங் குழல்வள்ளி கேள்வன் கருதலரைப்
> பொருமுரு காதி பனைக்காட் டெனமன்னன் போந்துசொல்ல
> அருமுரு காநிற் பவன்தங் கருணை கிரியுரைத்த
> வருமுரு காற்றுப்படை கொண்டவ செந்தில் மன்னவனே!
>
> -(வரு- I; முதல் பாடல்)

என்று முதல்பாடல் அமைந்துள்ளது. மன்னன் ஒருவன், ''முருகனைக் காட்டு'' என அருணகிரிநாதருக்கு உரைக்க, அதனால் அருணகிரி உரைத்த வருமுருகாற்றுப்படையைக் கொண்டிருக்கக் கூடிய செந்தில் பதியில் வாழும் மன்னவா! என்று சொல்லப்பட்டுள்ளது. இதனால் வருமுருகாற்றுப்படையைப் பாடியவர் அருணகிரிநாதர் என்பதை உணரலாம்.

இத்தொகுப்பில் உள்ள பிற ஆற்றுப்படை நூல்களில் ஆசிரியர் குறித்த அகச்சான்றுகள் எதுவும் இல்லை. ஒரே தொகுதியில் அமைந்து இருப்பதாலும் ஒத்த

பொருளமைப்பு உடையதாக விளங்குவதாலும் யாப்பமைப்பில் பெரிதும் ஒத்து இருப்பதாலும் பிற நூல்களும் அருணகிரிநாதரால் இயற்றப்பட்டவை எனக் கருதலாம். இருப்பினும் ஒத்த பொருளமைப்பு உடையதாக விளங்குவதாலும் யாப்பமைப்பில் பெரிதும் ஒத்து இருப்பதாலும் தொகுப்பாக அமைந்திருக்க இடமுண்டு என்பது கருதத்தக்கது.

ஆற்றுப்படைத் தொகுதி - பாடுபொருள்

பத்துப்பாட்டு நூல்களில் உள்ள ஐந்து ஆற்றுப்படை நூல்களில் திருமுருகாற்றுப்படையைத் தவிர மற்ற ஆற்றுப்படை நூல்களில் மன்னர்களையும் வள்ளல்களையுமே பாட்டுடைத் தலைவராக வைத்துப் பாடப்பட்டுள்ளன. இந்த ஆற்றப்படைத் தொகுதியில் உள்ள ஒன்பது நூல்களும் முருகனாகிய தெய்வத்தைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அமைந்துள்ளன. முருகப்பெருமானின் சிறப்பு, வீரம், அவன் குடிகொண்டுள்ள ஆறுபடை வீடுகளின் சிறப்பு முதலிய செய்திகள் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளன.

ஆற்றுப்படைத் தொகுதி - பெயர் அமைவு

ஆற்றுப்படை நூல்களில், யார் ஆற்றுப் படுத்தப்படுகிறார்களோ அவர்கள் பெயரால் அந்நூல்கள் பெயர் பெற்று விளங்குகின்றன. திருமுருகாற்றுப்படை, யாரிடம் ஆற்றுப் படுத்துப்படுகின்றாரோ அத்தலைவனின் பெயரால் - முருகனின் பெயரால் பெயர் பெற்றுள்ளது. அதைப் போலவே இந்த ஆற்றுப்படைத் தொகுதியில் உள்ள நூல்களும் முருகனின் பெயரால் அமைந்துள்ளன. திருமுருகாற்றுப்படையில் முருகனுக்குத் 'திரு' என அடைமொழி கொடுத்திருப்பதைப் போன்று, இந்த ஆற்றுப்படைத் தொகுப்பில் அமைந்துள்ள நூல்களின் தலைப்புகளில், 'அணி', 'அருள் ', 'இயல்', 'சேய்', 'பொரு', 'வரு', 'வேல்', 'ஒரு' என்று அடைமொழிகள் தரப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

ஆற்றுப்படைத்தொகுதி - நூல்அமைவு

இந்த ஆற்றுப்படைத்தொகுதியில் ஒன்பது ஆற்றுப்படை நூல்கள் அமைந்துள்ளன.

1. அணி முருகாற்றுப்படை

இத்தொகுதி நூலின் முதல் நூலாக அமைவது அணிமுருகாற்றுப்படை. இந்நூல் 77 பாடலடிகளைக் கொண்ட நூலாக விளங்குகிறது. நூலின் தொடக்கத்தில்,

பரங்குன்றில் பன்னிருகை கோமான் பொற்பாதங்
கரங்குவித்தே கண்குளிரக் கண்டே - சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே! அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாய்க கொண்டே புகல்.

என்று நேரிசை வெண்பா ஒன்று அமைந்துள்ளது. திருப்பரங்குன்றத்தில் பன்னிரு கரங்களைக் கொண்டு விளங்கும் முருகப்பெருமானை வணங்கி, கண்ணாரக் கண்டபின் இந்நூல் எழுதப்பட்டது என்பதையும் முருகனின் உருவ வர்ணனை, வீரம் சிறப்புகள் போன்றவற்றை மனத்திற்குக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது என்பதை இப்பாடலால் அறியமுடிகிறது.

மறைகளின் சுருக்கமாக முருகன் விளங்கும் தன்மை. சரவணப் பொய்கையில் பிறப்பெடுத்தது, வள்ளியைத் திருமணம் செய்து கொண்டது. அடியாரின் நோய் தீர்க்கும் தன்மை, தோற்றப் பொலிவு, பன்னிரு கரங்களிலும் ஏந்தியுள்ளவை குறித்த செய்தி, ஆறுமுகங்களின் சிறப்பு, சிவபெருமானின் சிறப்பு, சிவபெருமானின் மைந்தனாக விளங்கும் தன்மை, சூரபதுமனை அழித்தது. அடியவர்க்கு, வாக்கு, பொருள், பயன், செல்வம் கொடுக்கின்ற செய்தி முதலானவை இந்நூலில் அமைந்துள்ளன.

2. அருள் முருகாற்றுப்படை

இந்த ஆற்றுப்படைத் தொகுதியின் இரண்டாவது நூலாக அமைவது அருள் முருகாற்றுப்படையாகும். இந்நூல் 36 பாடலடிகளைக் கொண்டு விளங்குகிறது. அருளை வழங்கி இவ்வுலகைக் காப்பவனே! எனக்கு அருளை வழங்குவாயாக! என வேண்டுவதாக அமைவதால் '**அருள்முருகாற்றுப்படை**' என்ற பெயர் பெற்றது போலும்!

''அருளா லுலக அமர்ந்தினி தளிக்கும் ''

எனத் தொடங்கி,

''சாற்றவுன் திருத்தாளைத் தந்தருள் எனக்கே''

என நிறைவுற்றிருப்பது இந்நூலின் தனித்தன்மையாகும்.

முருகப்பெருமான் வள்ளி, தெய்வயானையை மணந்த செய்தி, அறுபடை வீடுகளில் குடியிருக்கும்செய்தி, கிரௌஞ்ச அரக்கனை வதை செய்தது, இந்திரனைக் காக்கச் சூரனை அழித்தது, தீவினைகள், பகை முதலானவற்றை அழிக்கும் செய்தி ஆகியவையும் இறுதியில் தனக்கு அருள்புரியுமாறு நூலாசிரியர் வேண்டுவதும் அமைந்துள்ளன. நூலின் ஆசிரியரைப் பற்றிய எந்தச் செய்தியும் கூறப்படவில்லை.

3. இயல் முருகாற்றுப்படை

இந்த ஆற்றுப்படைத் தொகுதியில் மூன்றாவதாக இடம் பெற்றுள்ள நூல் இயல் முருகாற்றுப்படையாகும். முருகனின் இயல்புகளை நிரல்படுத்திக் கூறுவதால் இப்பெயர் பெற்றது போலும்! முருகனின் பல்வேறு சிறப்பு இயல்புகள், கிரௌஞ்ச அசுரனைக் கொன்ற செய்தி, மதுரை நக்கீரரின் திருமுருகாற்றுப்படையைக் கண்டு மகிழ்ந்து அருளிய செய்தி ஆகியவையும் இறுதியில் அடியார்களுக்கு இம்மையில் பெரும்பொருள் அளித்து, மறுமையில் வீடுபேற்றினைத் தந்தருள வேண்டும் என்று வேண்டுவதான செய்தியும் கூறப்பட்டுள்ளது.

29 பாடலடிகளைக் கொண்ட இச் சிறிய நூலின் ஆசிரியரைப் பற்றி நூலுள் எந்த குறிப்பும் காணப்படவில்லை.

4. சேய் முருகாற்றுப்படை

இந்த ஆற்றுப்படைத் தொகுதியில் நான்காவதாக இடம்பெற்றுள்ள நூல் சேய் முருகாற்றுப்படையாகும். இந்நூல் 44 பாடலடிகளைக் கொண்டது. தன்னுடைய தீமைகளைத் துரத்தி, செல்வத்தையும், பெருமையையும் நல்கவேண்டும் என்று தாயிடம் வேண்டும் சேயைப்போல இறைஞ்சி நிற்பதால் சேய்முருகாற்றுப்படை என்று பெயர் பெற்றது போலும்!

முருகனின் சிறப்புகள், திருஞான சம்பந்தராக அவதரித்து, மதுரையில் சமணரைக் கழுவேற்றியது. ஏடுகளை எதிரேறச் செய்தது. சூரபன்மனை வதம் செய்தது, திருத்தணிகை, திருச்செந்தூர், செய்யூர், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருப்பழனம், சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை ஆகிய இடங்களில் எழுந்தருளியுள்ளது. தன் தீமைகளைப் போக்கி, பெருஞ் செல்வத்தையும், பெருமையையும் தந்து அருள வேண்டுமென நூலாசிரியர் வேண்டிக் கொண்டது ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

5. பொரு முருகாற்றுப்படை

இந்த ஆற்றுப்படைத் தொகுதியில் ஐந்தாவதாக இடம் பெற்றுள்ள நூல் 'பொரு முருகாற்றுப்படை' யாகும். இந்நூல் 54 பாடலடிகளைக் கொண்டு விளங்குகிறது.

''அசுர சங்காரா! அகோர சங்காரா!''

-(பொரு: 26)

''மந்திர சங்காரா! சகல தெய்வப்
பிரமராட் சதசங்காரா! பிரேத சங்காரா!
பிசாசு சங்காரா! சத்துரு சங்காரா!''

- (பொரு: 31-33)

என்று அசுரர்களையும், தீயவர்களையும், மந்திரங்களையும் பிரம ராட்சதர்களையும், பேய் பிசாசுகளையும், எதிரிகளையும் சண்டையிட்டு அழித்தவன் என்பதையும் எடுத்துக் கூறுவதால் இப்பெயர் பெற்றது போலும்! (பொருதல் - சண்டையிடுதல்)

முருகனின் வீரம் குறித்த செய்திகளும், தீயவர்களை அழித்த செய்திகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. மந்திரச் சொற்கள் அதிகம் விரவி வருவது குறிப்பிடத்தக்கது. அகச் சான்றுகள் வழி இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

6. வரு முருகாற்றுப்படை - I

இந்த ஆற்றுப்படைத் தொகுதியில் ஆறாவதாக இடம்பெற்றுள்ள நூல் வருமுருகாற்றுப்படையாகும். இந்நூல் 94 பாடலடிகளைக் கொண்டது. அகச்சான்றின் வழியாக இந்நூலின் ஆசிரியர் அருணகிரிநாதர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

''கருமுரு காருங் குழல்வள்ளி கேள்வன் கருதலரைப்
பொருமுரு காதி பனைக்காட் டெனமன்னன் போந்து சொல்ல
அருமுரு காதிற் பவன்றங் கருணை கிரியுரைத்த
வருமுரு காற்றுப்படை கொண்டவ செந்தில் மன்னவனே! ''

(வரு- I ; முதல் பாடல்)

என்ற பாடலடிகளால் மன்னவனின் வேண்டுகோளுக்கு இணங்க அருணகிரிநாதர் இவ்வருமுருகாற்றுப்படையை இயற்றியுள்ளார் என்பதை அறியலாம்.

''மருக வருக என்பார் வெருவாமுனம்
போற்றி போற்றியென் நின்னடி மலரிட்டு
ஏற்றி வார்முன் னிமைப்பினில் வருகவே ''

(வரு- I ; 92-94)

என்று, வருக என்று வேண்டி முருகப் பெருமானை வழிபட்டுப் போற்றி செய்து நிற்பவர்களுக்கு முன்னால் விரைவாக வரவேண்டும் என்று வேண்டப்படுவதால் இப்பெயர் பெற்றது போலும்! முருகனின் சிறப்புகள், முருகனின் தோற்றப் பொலிவு, சிவபெருமானின் சிறப்பு, கஜமுகாசுரனின் நகரை அழித்த செய்தி, சூர பதுமனை அழித்த செய்தி முதலானவை கூறப்பட்டுள்ளன.

7. வருமுருகாற்றுப்படை - II

இந்த ஆற்றுப்படைத் தொகுதி நூலின் ஏழாவது நூலாக அமைந்துள்ளது வருமுருகாற்றுப்படை - II நூலாகும். 85 பாடலடிகளைக் கொண்டு இந்நூல் விளங்குகிறது.

முருகனின் உருவச் சிறப்பு, சூரனை அழித்த செய்தி, முருகன் எழுந்தருளியுள்ள குன்றுகள், தீமைகளை அழிக்க வருமாறு வேண்டுதல் முதலான செய்திகள் அமைந்துள்ளன.

8. வேல் முருகாற்றுப்படை

இந்த ஆற்றுப்படைத் தொகுதி நூலின் எட்டாவது நூலாக அமைந்துள்ளது வேல் முருகாற்றுப்படையாகும். 39 பாடலடிகளைக் கொண்டது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலின் பெயர்க் காரணத்தையும் அறிய முடியவில்லை. முருகனின் தோற்றப் பொலிவு, சிறப்புகள் முதலான செய்திகள் அமைந்துள்ளன.

9. ஒரு முருகாற்றுப்படை

இந்த ஆற்றுப்படைத் தொகுதியின் இறுதி நூலாக வருவது ஒரு முருகாற்றுப்படையாகும். 41 பாடலடிகளைக் கொண்டது இந்நூல். வருமுருகாற்றுப்படையில் காணும் சில பாடலடிகள் இந்நூலில் பயின்று வந்துள்ளன. முருகனின் சிறப்புகள், சூரனை அழித்தது ஆகிய செய்திகள் கூறப்பட்டிருப்பதோடு, பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதலானவை தன்னை அணுகாமல் காக்க வேண்டும் என்று வேண்டுவதாக அமைந்துள்ளது.

3. முருகன்

1. முருகன் வழிபாடு

தொன்மைமிக்க தமிழகத்தில் முருகன் வழிபாடு ஆதி காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. இதனால் பழந்தமிழ் இலக்கண நூலாக இன்று நமக்குக் கிடைக்கும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள,

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''

(தொல், அகத்திணையியல்: 5)

என்பதன் மூலமாகத் தெரிந்து கொள்ளமுடிகிறது. தொல்காப்பியத்தில் மலையும்மலையைச் சார்ந்த இடமுமாக விளங்கக் கூடிய குறிஞ்சிநில மக்களின் வழிபாட்டுக் கடவுளாக முருகன் போற்றப்படுகிறான்.

குறிஞ்சிநில மக்களின் வழிபாடாகத் தொல்காப்பியர் காலத்தில் இருந்த முருகன் வழிபாடு, சங்ககாலத்தில் நாடு தழுவிய வழிபாடாக வளர்ந்துவிட்டது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் இதற்குச் சான்று பகர்கின்றன. பத்துப்பாட்டால் திருமுருகாற்றுப்படையும் எட்டுத்தொகை நூல்களில் பரிபாடலும் முருகனின் வழிபாட்டைப் பெரிதும் போற்றுவனவாக அமைந்துள்ளன.

குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார்,

''தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முருக்கைக் குன்றி
னெஞ்சுபக வெறிந்த செஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
வேம வைகலெய் தின்றா லுலகே''

என்று முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்திற்கும் தெய்வமாக முருகனைக் கூறுகிறார்.

'வெறியாட்டு' என்னும் பழந்தமிழர் வழிபாட்டுமுறை சங்ககாலத்தில் முருகனோடு தொடர்புடையதாத் திகழ்ந்தது. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வெறியாட்டுப் பெருவழக்காக இருந்துள்ளது என்பதை,

''வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெளியாட் டயர்ந்த காந்தளும்''
(தொல. பொருள்:60)

என்பதால் அறியமுடிகிறது. 'மனிதர் மேல் தெய்வம் ஏறிவரும்' என்ற நம்பிக்கையின் அடிப்படையில் உருவான இவ்வெறியாட்டின் பொழுது முருகனின் சின்னமாக விளங்கும் வேலினைக் கையில் ஏந்திக் கொண்டு சாமி ஆடுவோன் 'வேலன்' என்று அழைக்கப்பட்டான். அகப்பாடல்கள் பலவற்றில் இவ்வெறியாடல் குறித்த செய்திகள் காணப்படுகின்றன.

இவ்வெறியாட்டின் போது துன்பங்கள் எல்லாவற்றிற்கும் முருகனே காரணம்

என்று கூறுவது வேலனுடைய பண்பு. மகளிர் மெலிவுக்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகின்ற தாய் ஊர்வேலனை அழைத்துக் கேட்பாள். அவன் சில சடங்குகள் இயற்றி, முருகனே அவள் மெலிவுக்கு காரணம் என்று கூறுவாள்.

ஐங்குறு நூற்றில் 'வெறிப்பத்து' என்பது ஒரு பகுதியாகும். வெறியைச் சிறப்பித்துப் பாடிய ஒரு புலவர், 'வெறியாடிய காமக்கண்ணியார்' எனப்பட்டார்.

தமிழர் வணங்கிய பழமையான தெய்வமான முருகன், சங்க நூல்களில் வீரக்கடவுளாகப் புகழப்படுகிறான்.

காப்பியங்களில் சிலப்பதிகார இந்திர விழவூரெடுத்த காதையில்

''பிறவா யாக்கைப் பெரியயோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
(சிலப்பதிகாரம் : 169-171)

எனப் பல்வேறு கோயில்களில் அழகுபெற ஆறுமுகப் பெருமானின் கோயில் விளங்கியது என்ற செய்தி காணப்படுகின்றது.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் காஞ்சியில் தோன்றிய கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தை இயற்றினார். 10346 செய்யுட்கள் உள்ள இந்நூலில், ஆறு முகத்தின் தத்துவக் கருத்துகள், முருகனுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள், பல்வேறு கதைகள், அறுபடை வீடுகள், முருகன் ஆறுமுகம் கொண்டது, வேல்தாங்கியது, சூரனைத் தடிந்தது வள்ளி தெய்வானையை மணந்தது முதலானவை வேறு எந்த நூலிலும் கூறப்படாத அளவு விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் நக்கீரரின் திருமுருகாற்றுப்படையில் முருகன் பாட்டுடைத் தலைவவாகப் போற்றப்படுவதைப் போன்று, சிற்றிலக்கியங்களில் பல முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு போற்றுகின்றன. குமரகுருபரரின் பிரபந்தங்கள், அருணகிரியாரின் திருப்புகழ், இராமலிங்க அடிகளாரின் திருஅருட்பாவின் சில பகுதிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் நூல்கள் முதலானவற்றில் முருகன் குறித்த விரிவான செய்திகள் அமைந்துள்ளன. சில தனிப்பாடல்கள் முருகனின் சிறப்பை எடுத்தியம்புகின்றன.

2. முருகனின் பிறப்பு

ஒரு சமயம் பிரமனும் தேவர்களும் கைலாயம் சென்று சிவனைக் கண்டு

தங்களைச் சூரபதுமன் கொடுமையிலிருந்து விடுவிக்க வேண்டுமென வேண்டினர். ஐம்முகமுடைய சிவபெருமான் மேலும் ஒரு முகத்தைப் புதுவதாகப் படைத்துக் கொண்டு தம் ஆறுமுகங்களினின்றும் ஆறு தீப்பொறிகளை உண்டாக்கினார். பின்னர்த் தீக்கடவுளையும் வாசு தேவனையும் நோக்கி, அப்பொறிகளைக் கங்கையில் கொண்டு சேர்க்குமாறு பணித்தார்.

அவர்கள் அவ்வாறு சேர்க்கவே, கங்கை அவற்றைச் சரவணப் பொய்கையில் சேர்த்தது. அங்க அந்த ஆறு தீப்பொறிகளும் ஆறு குழந்தைகளாக மாறின. திருமாலும் தேவர்களும் வேண்டிக் கொண்டதை ஏற்ற கார்த்திகை மகளிர் அறுவரும் அக்குழந்தைகளை வளர்த்தனர். உமையம்மை சரவணப் பொய்கைக்குச் சென்று ஆறு குழந்தைகளையும் அன்பினால் ஒரு சேரத் தழுவியவுடன் அவை ஆறுதலைகளையும் பன்னிரு கைகளையும் கொண்ட ஒரு குழந்தையாயின என்று,

''எந்த சக்திகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லை
முந்து போலஒன் றாகியே கூடிய முறைபோல்
அந்த மில்லதோர் மூவிரு வடிவமொன் றாகிக்
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்''[9]

என்ற பாடல்வழி ஆறு உருவங்களின் சேர்க்கையினால் முருகப் பெருமான் தோன்றியதை அறிந்து கொள் முடிகிறது. பரிபாடலில் முருகனின் பிறப்பு சற்று மாறுபட்ட முறையில் கூறப்பட்டுள்ளதென்பது இங்குச் சுட்டத்தக்கது.

3. முருகனின் பல்வேறு பெயர்கள்

சிவபெருமான் அளித்த ஆறு தீப்பொறிகளை அக்கினிபகவான் தாங்கிக் கங்கையில் விட அவை ஆறு குழந்தைகளாயின. உமாதேவி அந்த ஆறு குழந்தைகளையும் சேர்த்து அணைக்க, அவை ஆறுமுகமும், பன்னிரு கைகளும் உடைய **சண்முகன்** ஆயின. ஆறு குழந்தைகளும் ஒன்றுபட்ட வடிவம் பெற்றதால் முருகப் பெருமான் 'ஸ்கந்தன்' எனப்பட்டார். இச்சொல் 'கந்தன்' எனத்திரிந்தது.

'**முருகு**' என்னும் சொல்லின் பொருள்களுள் சிறப்பானவை மணம், இளமை, கடவுள் தன்மை, அழகு என்பன. முருகை உடையவன் **முருகன்** . முருகன் இயற்கை மணமும், மாறா இளமையும், எல்லாப் பொருளையும் கடந்து ஒளிரும் தன்மையும், அழியா அழகும் உடையவன் ஆவான் என்பார் திரு.வி.க. கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டதால் **கார்த்திகேயன்.** கங்கையில் தோன்றியதால் **காங்கேயன்** . என்றும் இளமையாய் இருப்பவனாதலால் **குமரன்.** **விசாகன்** நட்சத்திரத்தில் தோன்றியவனாதலால் விசாகன். அடியாரின் இதயக் குகையில் அருள் பாலிப்

....

[9]கந்தபுராணம், சரவணப் படலம் : 21.

பதால் **குகன்.** குறிஞ்சி நிலத்தின் கடம்ப மலர் மாலையை அணிந்திருப்பதால் **கடம்பன்.** வேலைத் தன் போர்ப்படையாக்கிக் கொண்டதால் **வேலன்** என்றும் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறான்.

தொல்காப்பியர் பொருளதிகாரம் ஐந்தாம் நூற்பாவில் 'சேயோன்' மலைவாழ் மக்களின் தெய்வமெனக் கூறியுள்ளார். இச்சேயோன் முருகப் பெருமானாவார். சங்க இலக்கியங்களில் செவ்வேள், முருகன், சேய், வேள், நெடுவேள், வேல்வேள், நெடியோன், குமரன், மாஅல், மருகன், காஅய், கடவுட்செய், வெறிகொண்டான், முருகு, விறல்வேள், ஆலமர் செல்வன் மகன், வேலன், இறை, அருந்திறற் கடவுள், மலையுறை கடவுள், கொற்றவை சிறுவன் எனப் பலபெயர்கள் சொல்லப்பட்டுள்ளன.

இந்த ஆற்றுப்படைத் தொகுதியில் முருகனின் பல்வேறு பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

'பன்னிருகை கோமான்'	(அணி: வெண்பா:1)
''சுப்பிரமணியன்''	(அணி:1)
' சுகந்தா'	(அணி:2)
கந்தா	(அணி:3)
ஆன்றபச்சை ஈன்ற சுடர்மணி	(அணி:21)

என்று அணி முருகாற்றுப்படையிலும்,

''திரியம்பதி குமரா''	(அருள் : 2)
'கங்கை மைந்தா'	(அருள்: 3)
'கார்த்திகை சிறுவா'	(அருள்: 3)
'மங்கை பங்கர் வழிபடு தேசிகா'	(அருள்:4)
'கண்ணன் மருகா'	(அருள்:5)
'கணபதி சோதரா'	(அருள்:5)
'வாருதி மருகா'	(அருள்:5)
' சரவண பவனே'	(அருள்:20)
'சண்முகா'	(அருள்:30)
'விசாகா'	(அருள்:31)
'செந்தா'	(அருள்:32)
'செட்டி'	(அருள்:33)
'கந்தா'	(அருள்:33)
'சிந்தாமணி'	(அருள்:34)

என்று அருள் முருகாற்றுப்படையிலும்,

'கந்தன்' (இயல் : 1)
'கணபதிக் கிளையோன் (இயல்: 10)
'திருமால் மருகன் (இயல் : 11)
முருகன் (இயல் : 20)

என்று இயல் முருகாற்றுப்படையிலும்,

'கந்தன்' (சேய் : 1)
'கடம்பன்' (சேய் : 1)
கௌரி தன் பாலன் (சேய் : 21)

என்று சேய் முருகாற்றுப்படையிலும்

'காங்கேயா' (பொரு : 15)
' வேலாயுதா' (பொரு : 30)

என்று பொருமுருகாற்றுப்படையிலும்,

கார்த்திகேயன்' (வரு-I : 22)
'சுப்பிரமணியா' (வரு-II : 22)

என்று வரு முருகாற்றுப்படை -I நூலிலும்,

'மயூர வாகனா' (வரு - II : 10)
'தெய்வானை நாயகா' (வரு- II : 10)
'வள்ளி மணவாளா (வரு- II : 11)
'ஆறுமுகவா' (வரு- II : 11)
'முருகா' (வரு- II : 61)
'சரவணா' (வரு- II : 61)
'உமைபுதல்வா' (வரு- II : 71)
'சுப்பிரமணிசுவாமி (வரு- II : 34)

என்று வருமுருகாற்றுப்படை - II நூலிலும்

அண்டர் நாயகனே' (வேல் : 34)
'ஆறுமுகத்தரசே' (வேல் : 34)

என்று வேல் முருகாற்றுப்படையிலும்

கார்த்திகேயா (ஒரு : 29)
பாலசுப்பிரமணியா (ஒரு : 29)

என்று ஒரு முருகாற்றுப்படையிலும்

4. முருகனின் உருவப் பொலிவு

சங்க காலம் முதல் இன்று வரை முருகப் பெருமானின் உருவப் பொலிவைப் பலரும் ஈடுபாட்டுடன் பாடியுள்ளனர். முருகனின் மேனி நிறம் குறித்து, குறிப்பிடப் பட்டுள்ளது.

''காதறு ரெட்டியும் பவள மேனியும்'' (இயல் : 17)

''பொன்னிற மேனியும் பொற்பமா முடியும் (வேல் : 1)

''பழமுதிரச் சோலை மலைதனில் பதிந்த
அழல்செறி வடிவாய்! மாரநா யகனே '' (சேய் : 35-36)

''பலவித வண்ணமாய்ப் படைத்திரு மேனியும் (வரு-II : 29)

என்று சிவந்தமேனி, பொன்னிற மேனி, அழல்நிற மேனி பலவித வண்ணம் கொண்ட மேனி என ஆற்றுப்படைத் தொகுதியில் கூறப்பட்டுள்ளது.

முருகப் பெருமானின் ஆறு முகங்களில் சிறப்பு, கழுத்தின் சிறப்பு, மார்பின் சிறப்பு அவற்றில் அணிந்துள்ள அணிகலன்கள் போன்றவை,

''மின்னறு முகமும் விழிபன் னிரண்டும்
நீறணி நெற்றியும் நீள்கை வாயும்
கூறொணா வடிவுடை கூரிய மூக்கும்
ஆரம் செறிந்த அணித்தரு கழுத்தும்
பார்குண் டலங்கள் பத்திய குழையும்
முந்நூல் மார்பும் முழுமணி வடமும்''
(வேல் : 2-7)

என்று வேல் முருகாற்றுப்படையிலும்,

''கூற அரிய ஆறு முகத்தில்
ஒருமுகம் ஈசன் ஒருமுகம் திருமால்
ஒருமுகம் சந்திரன் ஒருமுகம் வினாயகன்
உற்ற திருமுகம் பெற்ற கருணையன்''

(அணி : 49-53)

என்று அணிமுருகாற்றுப்படையிலும்,

''பன்னிரு குழையும் பணிபல வாக்கிய
வைரத் தோடு மகரகுண் டலமும்
மொன்றை மழவும் ஓங்கநற் கோப்பும்
கிரிடஞ் சூழ்ந்த கிளர்வெண் முடியும்
சிரித்த முகமும் செந்தூர நுதலும்''

(வரு - II : 17-18)

என்று வருமுருகாற்றுப்படை (II) யிலும்,

''கடம்பணி தாரோன் கந்தனென் சென்னியன்
மூவிரு முகமும் முகத்திரு கண்ணும்
காதறு ரெட்டியும் பவள மேனியும்
விளங்குமணி ஆரமும் வீரப்பிர தாபமும்
சிவயநம வென்ற திருநீற்றுக் காப்பும்''

(இயல் : 15-19)

என்று இயல் முருகாற்றுப்படையிலும்,

''புண்ட ரீக யோக முகங்களில்
குண்டரக் குழைபல கண்டத் தணிந்து
ஆரமும் நூலும் மார்பினில் இலங்கச்
செச்சைத் தாங்கலும் கச்சுடை மருங்கும்''

(வரு-I : 3-6)

என்று வருமுருகாற்றுப்படை (1) யிலும் கூறப்பட்டுள்ளன.

முருகப்பெருமானின் முந்நான்கு தோள்களும் முழவினை ஒக்கும் என்று பரிபாடல் (பாடல் 5:11) கூறும். அணிமுருகாற்றுப்படை, ஒவ்வொரு தோளிலும் கடவுளர் விளங்குவதாகக் கூறுகின்றது. பன்னிரு தோள்களிலும் உள்ள கடவுளர்களாக ஈசன், பார்வதி,

மாதவன், நான்முகன், சந்திரன், இந்திரன், சூரியன், பூமகள், நாமகள், வருணன்,ஆகியோர் விளங்குவதோடு, சப்த ரிஷிகளும், வேதமும் முருகனின் தோள்களில் விளங்குவதாக,

''ஒருதோள் ஈசன் ஒருதோள் பார்வதி
ஒருதோள் மாதவன் ஒருதோள் நான்முகன்
ஒருதோள் சந்திரன் ஒருதோள் இந்திரன்
ஒருதோள் சுருதி ஒருதோள் பருதி
ஒரு தோள் பூமகள் ஒருதோள் நாமகள்
ஒருதோள் சப்தரிஷியும் வருணனு மாக ''
(அணி: 35-40)

என்று எடுத்துரைக்கிறது. வருமுருகாற்றுப்படை -I,

''ஆறிரு தோளும்'' மாலை வேலும்'' (வரு-I:7)

என்று எடுத்துரைக்கிறது முருகப்பெருமான் தன் பன்னிரு கைகளிலும் பன்னிரு ப்டைகளைக் கொண்டுள்ளார். இதனை,

''மறியும் மஞ்ஞையும் வாரணச் சேவலும்
பொறிவரிச் சாபமும் மரனும் வாளும்
செறிநிலை ஈட்டியும் குடாரியும் கணிச்சியும்
தெறுகதிர்க் கனலியும் மாலையும் மணியும்
வேறுவேறு ஊருவினிவ் வாறிருகை கொண்டு''
(பரி: 5:63-68)

என்று பரிபாடல் கூறுகிறது.

''ஓங்கிய திருக்கையில் வாங்கிய வேலும்
ஆவலம் கொண்ட சேவலங் கொடியும்
அங்குச மயிலோர் தங்கிய சூலமும்
வீசுவில் தண்டும் பாசக் கரமும்
வச்சிர மழுவாள் மெச்சிய கடகம்
துலங்கிய நேரத்தில் நிலங்களோ டிலங்க
ஈராறு உறுப்பு ஈராறு கையும்''
(அணி: 42-48)

என்று பன்னிரு கரங்களிலும் பலவாகிய ஆயுதங்களை ஏந்திய செய்தி அணிமுருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது.

பன்னிரு கரங்களிலும் பன்னிரு ஆயுதங்களாக வேல், வாள், சக்கரம், வச்சிராயுதம், குக்குடம், பொன் தண்டம், வரதம், அபையம், இருதலைச் சூலம், சரம், சாபம் ஆகியவற்றை ஏந்தியுள்ள செய்தி,

''பன்னிரு கரத்தில் பதிந்த ஆயுதமும்
வேல்வாள் சக்கரம் வெயிலொளி வச்சிரம்
பால்நிற குக்குடம் பரிசைபொற் தண்டம்
வரதம் அபையம் இருதலைச் சூலம்
சரமொடு சாபம் தன்கரத் தேந்தி

(வேல்:8-12)

என்று வேல் முருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது. மேலும் வருமுருகாற்றுப்படை (II) யில்,

''பன்னிரு கரமும் பலவா யுதங்களும்
சங்குசக் கரமும் தன்னிரு புயமாய்
வச்சிரா யுதமும் வைர வாளும்
சூலம் வேலும் துரொட்டிய மழவும்
சூரிகை பரிசை தோணிவில் லம்பு
கரந்தலை பட்டையம் கட்டாரி சொட்டை
பிடித்த கரத்திடைப் பெருவிரல் சுத்தி
எடுத்தஆ யுதங்கள் எண்ணிலக் கில்லா
சூரன் மார்பு துளைத்திடும் வேலும்''

(வரு-II : 20-28)

என்று பல ஆயுதங்களையும் முருகப்பெருமான் தாங்கிய செய்தி சொல்லப்பட்டுள்ளது. இவையன்றிச் சேய் ஆற்றுப்படை,

''பன்னிரு கரத்தன் பதும்பீ டத்தன்''

(சேய்: 3)

''வெற்றிவேல் கரத்தன் வீறுசக் கிராயுதன்''

(சேய்:11)

என்று எடுத்து இயம்புகிறது.

முருகப் பெருமான் இடையில் வெண்பட்டுத் துகிலை ஆடையாக அணிந்துள்ள.

செய்தி, ஒட்டியாணம், அணிகள், மாலை ஆகியவைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள செய்தி,

''செச்சை மாலையும் சீராய் மருங்கில்
வைத்துடுத் தியதோர் மருங்கில் வெண் துகிலும்''
(வேல் : 13-14)

என்று வேல் முருகாற்றுப்படையிலும்,

''கச்சிடை மருங்கில் கட்டிய ஒட்டியாணம்
சிற்றிடை அலங்கல் சேர்ந்திடும் அணிபல
வண்ணக் கலைகள் வகுத்த தொங்கலும்''
(வரு II : 31-33)

''செச்சைத் தாங்கலும் கச்சுடை மருங்கும்''
(வரு-II : 6)

என்று வருமுருகாற்றுப்படை (I, II) களிலும் கூறப்பட்டுள்ளது.

வீரக்கழலும், வீரத் தண்டையும், வெற்றிச் சிலம்பையும் அணிந்திருப்பவர் முருகப்பெருமான் என்பதை,

''வீரத் தண்டையும் வெற்றிச் சிலம்பும்
சதங்கை கிண்கிணி சல்சல் என்றிடும்
.........................ஏற்றியசீர பாதம்''
(வரு-II: 34-36)

என்று வருமுருகாற்றுப்படை (II)யும்,

'' சதங்கை தண்டைகள் தானணி கின்ற
பதங்களில் இடப்பதம் பரிவுடன் மடித்து
மற்ற வலப்பதம் மகிழ்வுற நீட்டி''
(வேல் : 15-17)

என்று வேல்முருகாற்றுப்படையும்,

''தண்டையும் மணியும் புண்ட ரீகமும்
வேதவொலி பாடும் கீதகிண் கிணியும்''
(வரு-I : 9-10)

என்று வருமுருகாற்றுப்படையும் எடுத்தியம்புகின்றன.

5. அறுபடை வீடுகள்

இந்த ஆறுபடை வீடுகளை முதன் முதலாக குறிப்பிட்டுக் காட்டியவர் நக்கீரர். 'ஆற்றுப்படை வீடுகள்' என்னும் தொடர் மருவி ஆறுபடைவீடுகள் என்றாயிற்று என்பது சிலர் கருத்து. முதலாவது ஆற்றுப்படை வீடு திருப்பரங்குன்றம். இரண்டாவது வீடு திருச்சீரலைவாய் எனப்படும் திருச்செந்தூர். மூன்றாவது பழநிமலை அடிவாரத்தில் உள்ள திருவாவினன்குடி, நான்காவது சுவாமிமலை என்று இன்று வழங்கும் திருவேரகம். ஐந்தாவது குன்றுதோராடல். அருணகிரிநாதர் போன்றவர்கள் திருத்தணிகை மலையைக் குன்றுதோராடலாகக் குறிப்பிடுகின்றனர். ஆறாவது படைவீடு பழமுதிர்ச் சோலையாகும்.

''தென்பரங் குடியிலும் சீரலை வாயினும்
ஆவினன் குடியிலும் அன்பே ரகத்தினும்
அழகிய குன்றுதோ ராடலும் இனிய
பழமுதிர்ச் சோலை மலையினும் என்று'' (அருள் : 11 -14)

என்று ஆறுபடை வீடுகளைக் கூறும் அருள் முருகாற்றுப்படை,

''கூறுந் திருத்தணிக் குன்றினும் பதியினும்''
(அருள் : 16)

என்று குறிப்பிடுவதால் குன்றுதோராடலும் திருத்தணியை மலையும் வெவ்வேறு பதிகள் என்றுஅருள் முருகாற்றுப்படை ஆசிரியரால் உணரப்பட்டது புலனாகும்.

ஆறுபடை வீடுகளும் முருகன் எழுந்தருளியுள்ள ஊர்களும் சேய் முருகாற்றுப்படையில்,

''இடியென முழுங்கும் எழில்பெரு தணிகையான்!
செந்தில் பதியான்! செய்யூர்(க்) கந்தன் !
நந்துற்ற சீரலை வாயுறை நாதன்!
ஆவினன் குடியான்! அழகுள மங்கையான்!
தேவர்கள் போற்றும் திகழ்பழ ஊத்தான்!
ஏரகந் தனலே இமையவர் போற்ற
ஓரக மாக உறைந்திடும் சோதி!
பழமுதிர்ச் சோலை மலைதனில் பதிந்த
அழல்செறி வடிவாய் மாரநா யகனே! (சேய்: 23-26)

என்று திருத்தணியை, திருச்செந்தூர், செய்யூர், செந்தில்பதி, ஆவினன் குடி, திருப்பழனம், ஏரகம், பழமுதிர்ச்சொலை ஆகிய இடங்களில் முருகப்பெருமான் வீற்றிருந்தருளும் செய்தி கூறப்பட்டுள்ளது. மேலும் போரூரில் எழுந்தருளியுள்ள செய்தி,

''போரூர்க் குரிய பொற்பதனே போற்றி''
(சேய்: 42)

என்று கூறப்பட்டுள்ளது.

அறுபடை வீடுகளில் எழுந்தருளியுள்ள செய்தி வருமுருகாற்றுப்படை (II) யிலும்,

திருப்பெருங் குன்றுறையாய் நம
சீரலைவாய் நம திருவாவினன் குடியாய் நம
சென்னியங் கிரியாய் நம ஏரக கையாய் நம
பலகுன் றுரையாய் நம பழமுதிர்ச் சோலை
மலைகீழ் வேரக நம .... (வரு-II :65-69)

என்று கூறப்பட்டள்ளது.

6. முருகப்பெருமானின் திருமணங்கள்

முருகப்பெருமான் வள்ளி, தெய்வயானை ஆகிய இருவரை மணந்து கொண்டார். இவ்விருவரை மணந்து கொண்டமைக்கான காரணம் புராணக்கதைகளில் கூறப்பட்டுள்ளது.

பூர்வத்தில் திருமாலின் பெண்களாகத் தோன்றிய அமுதவல்லி, சுந்தரவல்லி என்ற இருவரும் முருகக்கடவுளை மணந்துகொள்ளும் பொருட்டுச் சரவணப் பொய்கையில் அருந்தவம் செய்தனர். முருகன், அமுதவல்லியைத் தேவர் உலகில் இந்திரனுக்கு மகளாகப் பிறக்கும்படியும், சுந்தரவல்லியைப் பூமியில் ஒரு முனிவனுக்குப் பெண்ணாகப் பிறந்து வேடரைச் சார்ந்து வாழும்படியும் கூறி, இருவரையும் திருமணம் செய்து கொள்வதாக அருள் செய்தார்.

அந்த மொழிப்படியே அமுதவல்லி வானுலகத்தைஅடைந்து, 'ஐராவதம்' என்னும் தெய்வ யானையால் தேவேந்திரனிடத்துச் சேர்ந்து 'தெய்வயானை' என்ற பெயர் பெற்றுத் தேவேந்தரனால் வளர்க்கப்பட்டாள். விண்ணுலக ஆட்சியைச் சூரபதுமன்

முதலான அசுரர்கள் கைப்பற்றி, விண்ணவர்களைச் சிறையில் அடைத்துத் துன்பம்செய்த காலத்தில், முருகப்பெருமான், தாரகன், சூரபதுமன், சிரௌஞ்சன் முதலான அசுரர்கள் வென்று, வெற்றிவாகை சூடினார். அதுகண்டு மகிழ்ந்த இந்திரன் தன் மகளான தெய்வயானையைத் தேவர்கள் போற்றும்படியாகத் திருமணம் செய்து கொடுத்தார்.

மற்றொருத்தியாகிய சுந்தரவல்லி அக்கினிப் பிரவேசம் செய்து தன்னுடம்பை ஒழித்து சூட்சும உடலுடன் 'மேற்பாடி' என்ற ஊரையடுத்த ஒரு மலையில் தவம் செய்து கொண்டிருந்தாள். அங்கு முன்னமே பெருந்தவம் செய்து கொண்டிருந்த 'சிவமுனி' என்பவர் அங்குவந்த பெண்மான் ஒன்றைக் கண்டு, காதல் கொண்டு கண்ணினால் நோக்கினான். அந்தப் பெண்மான் கருவுற, அந்தக் கருப்பத்தில் சுந்தரவல்லி புகுந்து கொண்டாள். அந்தப் பெண்மானால் வள்ளிக் கிழங்கு அகழ்ந் தெடுத்த பள்ளத்தில் மானிட பெண்வடிவத்தில் பிறந்தாள். வள்ளிக் கிழங்கு அகழ்தெடுக்கப்பட்ட பள்ளத்தில் தோன்றிய காரணத்தினால் வள்ளியெனப் பெயர் பெற்றாள். அவ்விடம் வந்த வேடர் தலைவனான நம்பிராசனால் வளர்க்கப்பட்டாள்.

மங்கைப் பருவமடைந்த வள்ளி, தினைப்புனம் காத்த காலத்தில், வேட்டுவக் கோலத்தில் அங்கு வந்த முருகன், வள்ளியின் மீது விருப்பம் கொண்டார். அங்கு நம்பிராசன் தன் வேடர் கூட்டத்தோடு வர, முருகப்பெருமான் வேங்கை மரத்தின் உருக்கொண்டு நின்றார். மீண்டும் அவ்விடத்தைவிட்டு அகன்ற நம்பிராசன் வர, முருகப்பெருமான் தவக்கோலம் கொண்ட வயோதிகராக உருக்கொண்டார். தன் மகளாகிய வள்ளிக்குத் துணையாக இருக்க வேண்ட, அவ்வாறே இருப்பதாகக் கூறி வள்ளியிடம் தன் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டிநின்றார். கோபத்தோடு அவ்விடம்விட்டு அகல முயன்ற வள்ளி, யானை உருக்கொண்டு அங்கு வந்த விநாயகரைக் கண்டு, முருகப்கெருமானிடம் தஞ்சடைந்தாள். முருகப்பெருமான் தன் உண்மை உருவை வள்ளிக்குக் காட்டி அருளினார். பின் வேடரோடு போர்புரிந்து வள்ளியைத் திருமணம் புரிந்துகொண்டார்.

இச்செய்தி இந்நூலில் அணிமுருகாற்றுப்படை, அருள் முருகாற்றுப்டை, இயல் முருகாற்றுப்படை, சேய்முருகாற்றுப்படை, வருமுருகாற்றுப்படை I-II, வேல்முருகாற்றுப்படை ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளன.

கருணையே வடிவாகக் கொண்ட தாமரை போன்ற இமையாத கண்களைக் கொண்ட தேவமகளாகிய தெய்வயானைக்குத் தலைவனாக விளங்குகின்ற செய்தியும், வில்லேந்திய வேட்டுவக் குடியயினரின் பரிபுரம் அணிந்த தாமரை போன்ற பாதங்களை உடைய சிறுமியான வள்ளியை மணந்த அழகே உருவானவனாக விளங்குகின்ற செய்தி,

''அமையாக் கருணை அம்புய நாட்டத்(து)
இமையாத் தெய்வ யானைக் கிறைவா!

வரிசிலை மறவர் தருகிற சிறுமி
பரிபுர கமல பாத சேகரா!''

-(அருள் : 6-10)

என்று கூறப்பட்டுள்ளது. மேலும் வள்ளி, தெய்வயானை ஆகிய இவ்விருவரையும் மணந்த செய்தி,

''தெய்வ யானையும் வள்ளியும் சேர்ந்தோன்''

-(இயல் : 12)

எனவும்,

''சந்தன குங்கும தடமணி மார்புற
வருக முருகா வருக வருக
வள்ளி தெய்வானை சேர்ந்திட்டு வீரமவர்''

-(வரு-II; 50-52)

எனவும்,

''பூண வணைத்துப் பொற்காடி தெய்வ
யானையைப் புறத்தில் சிறப்புற வைத்து
மற்ற வலப்புறம் வள்ளிநா யகியை
உற்றங் கணைத்து உக்கரமோ டிருந்து''

(வேல் : 22-25)

எனவும்,

''நின்னிடப் புறத்தில் தெய்வயா னையையும்
மன்னி வளர்ந்த வள்ளிநா யகியையும்''

எனவும் சொல்லப்பட்டுள்ளது. இவைதவிரத் தெய்வயானையை மணந்து செய்தி, வனத்தில் தவித்து வள்ளியைத் திருமணம் செய்து கொண்ட செய்தி ஆகியவை தனித்தனியாகவும் கூறப்பட்டுள்ளன. தெய்வ யானையை மணந்த செய்தி,

''இகந்த இந்திரன் பயந்த தந்தி
சந்தனந் திமிர்ந்த கும்பம் விம்ம
கொங்கை தங்கு செம்பு யத்தமா! '' - (வரு-I; 26-28)

என்றும்,

''பொன்பதிக் கிறைவன் புதல்வியை அருள
அன்பினால் மணம்புணர் யிராப தந்தோன்''

என்றும் கூறப்பட்டுள்ளது. வள்ளியின் மீது கொண்ட மயக்கத்தால் வனத்தில் தவித்த செய்தி,

''வள்ளிமா மயலால் வனந்தனில் தவித்தோன்''
(சேய்: 5)

என்றும், வள்ளியை மணந்து கொண்ட செய்தி,

''சொல்ல அரிய கல்லப் பதியில்
ஈன்ற மேகம் ஊன்றிய பொழிலுள்
தேன்மா குழவியை வானவர் முன்னே
மணமது கொண்டு பிணிபல தீர்த்து''
-(அணி : 24-26)

என்றும்,

''வள்ளி பாக மெல்லென வைத்தும்
பூங்கொடி மகளிர் வீங்கிள முலைமேல்
மணந்து புணர்ந்து மகிழ்ந்தும் புகழ்ந்தும்''
-(அணி : 71-73)

என்று வள்ளியை மணம்புரிந்து மகிழ்வோடு விளங்கிய செய்தியும் கூறப்பட்டுள்ளது.

7. சூரனை அழித்தல்

அசுரர்களின் தலைவனாக விளங்கிய அசுரேந்திரன் மகளாகிய சுரசைக்கும் காசியப முனிவருக்கும் தோன்றியவன் சூரபதுமன். தேவர்களை விடவும் சிறந்து விளங்க வேண்டுமென்ற தாயாரின் வேண்டுகோளுக்கிணங்க, சூரபதுமனும் அவனுடைய தம்பிமாரும் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் செய்தனர். சூரபதுமன் வேள்வித் தீயில்

குதித்தான். சிவபெருமான் அவனடைய கடுந்தவத்தை மெச்சி, அவனுக்குத் தேவகங்கையின் மூலம் உயிர் கொடுத்தார். ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்கள் ஆட்சி செய்ய அருள் புரிந்தார். மேலும் இந்திரஜாலம் என்னும் தேரையும் ஆட்சி உருளையும் தந்தார். எல்லோரையும் வெற்றிகொள்ளும் சக்தியையும் பாசுபத படைக்கலத்தையும் தந்தார். வச்சிராயுதத்தையும் கொடுத்தார். மேலும் தன் சக்தியைத் தவிர வேறு எந்தச் சக்தியும் அவர்களை அழிக்காமலிருக்க வரமருளினார்.

சூரபதுமன், தம்பிகளான சிங்கமுகாசுரன், தாரசாசுரன் இவர்களோடு சேர்ந்து தேவேந்திரனையும், எமனையும் அடிமைகளாகச் செய்தான். நரகர் உலகிலும் ஆதிசேஷனைத் தோற்கடித்து அவனிடமிருந்து அமுதத்தைப் பறித்துக் குடித்தான். அனைவரையும் துன்புறுத்தினான்.

தேவர்களின் வேண்டுகோளின்படி, சிவபெருமான் முருகப்பெருமானை அவதரிக்கச்செய்து அசுரர்களை அழிக்குமாறு கட்டளையிட்டார். அவருடைய கட்டளையைச் சிரமேலேற்று, நெறிப்படி நடக்க மனம் கொண்டு, முருகப்பெருமான் வீரவாகுத் தேவரைச் சூரபதுமனிடம் தேவரை விடுவிக்க வேண்டுமென்று தூதாக அனுப்பினார். சூரபதுமன் அகந்தையோடு மறுத்துவிட்டான். ஆகவே, சூரனை அழிக்கப் புறப்பட்டார் முருகப்பெருமான்.

அசுரர் பலரையும் அழித்தபின், முருகப்பெருமான் சூரனோடு போர் புரியத் தொடங்கினார். சூரபதுமன் சக்கரவாகப் பறவையாக மாறினான். சக்கரவாகப் பறவையாக மாறி பின் வீரர்களையும் சேனாதிபதிகளையும் கொடுமைகள் செய்தான். அந்நிலையில் முருகப்பெருமான் சூரபதுமனை மயில் உருவாக மாறியிருந்த தேவேந்திரன் மீதேறி இரு துண்டாக வெட்டினான். அப்பொழுதும் அவன் இறவாது, மகா சமுத்திரமாகவும் அக்கினியாகவும் மாறிப் போரிட்டான்.

இறுதியில் சூரபதுமன் பெரிய மாமர வடிவு எடுத்து நின்றான். அவனுடைய மாயையைக் கண்டு முருகப்பெருமான் வேலாயுதத்தை எறிய, அது சென்று மாமரவடிவை இரண்டு கூறுகளாகப் பிளந்தது. இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்ட சூரன் ஒரு பாகத்தில் மயில் வடிவத்தையும் மற்றொரு பாகத்தில் சேவல் வடிவத்தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அவை இரண்டும் கோபாவேசத்துடன் முருகனைத் தாக்க வந்தன. அவற்றைப் பெருமான் கனிவுடன் நோக்கினார். அவை இரண்டும் கோபம் தணிந்து, அமைதி பெற்று, அவரைப் பணிந்து நின்றன. முருகப்பெருமான் சேவலைக் கொடி உருவமாக மாற்றி இரதத்தில் தங்கியிருக்கும்படி செய்து, மயிலைத் தன்னுடைய வாகனமாக ஏற்றுக் கொண்டார். அக்கினியும் தேவேந்திரனும் சேவல், மயில் உருவங்களில் இருந்து விடுபட்டுச் சுயவடிவை அடைந்தனர். இச்செய்தி, அணி முருகாற்றுப்படை, அருள் முருகாற்றுப்படை, வருமுருகாற்றுப்படை-II, ஒரு முருகாற்றுப்படை ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளது.

''ஞாலம் சுழல வேலும் சுழற்றி
கால காலன் போலத் திரியும்
சூரன் உடலை வேரறத் துணிந்து''

-(அணி : 66-68)

என்றும் அணிமுருகாற்றுப்படையிலும்,

''வாருதி மருகா! மகபதி பிழைக்கச்
சூரனை முனிந்த வீரா போற்றி''

- (அருள்: 19-20)

என்றும் அருள் முருகாற்றுப்படையிலும்,

''பேரணி நெருங்கிச் சூரனை மோதி''

- (வரு-I : 56)

என்று வருமுருகாற்றுப்படை 1லும்

சூரன் மார்பு துளைத்திடும் வேலும்''

(வரு-II : 28)

என்றும் சூரனை அழித்த வேலின் சிறப்பு கூறப்பட்டுள்ளதோடு, சக்கரவாகப் பறவை வடிவில் இருந்தசூரனை வெட்டிய செய்தி,

''சீர்குதி மிரத்துப் பறவை யடக்கி
சிறுமா வயிற்றி குத்திக் கிழித்து''

-(வரு-II:57-58)

என்று வருமுருகாற்றுப்படை 2லும்

''சூரனை மோதி மீது சூரு'' -(ஒரு:13)

என்று ஒரு முருகாற்றுப்படையிலும் கூறப்பட்டுள்ளது.

இப்புராணக்கதைக்கு, முருகன் அல்லது அழகு' என்ற நூலில் திரு.வி.க. விளக்கம் கூறுவது வருமாறு :- [10]

''சூரன் தன் முனைப்பால் உண்மை அறிவிழந்து முருகனைப் பலவாறு எதிர்த்தான். முடிவில் பேரறிவின் வடிவமான முருகனால் அழிந்தான்.

முனைப்பு என்னும் ஆணவம், உயிரை ஆண்டவனோடு சேராவிடாமல் தடுக்கிறது,. ஆண்டவன் தன் அருட்பெருக்கால் உயிரை ஆணவத்திலிருந்து மீட்டுத் தன்னோடு இணைத்துக் கொள்கிறான். சூரன்-முருகன் போரில் அறியக் கிடப்பது இவ்வுண்மையாகும். ஒவ்வொரு மனிதனுடைய உள்ளமும் ஒரு போர்க்களம். அக்களத்தில் நாள் தோறும் சூரனுக்கு முருகனுக்கும் போர் நடந்த வண்ணம் இருக்கிறது. (சூரன்- ஆணவம் : முருகன்- அருட்கடவுள்) சூரன் முனைப்பால் போர்புரிந்தபோது முருகனைக் காணவில்லை. அம்முனைப்பு ஒடுங்கியபோது அவன் எங்கும் முருகனைக் காணும் பேறு பெற்றான். முனைப்பு கடவுளைப் பற்றிய உணர்வையும்

10. முருகன் அல்லது அழகு பக்.66-67

எண்ணத்தையும் மறைத்துவிடும் தன்மை உடையது. ஆதலால் முனைப்பு என்னும் ஆணவத்தை அறவே விடுத்து இறைவன் அருளைப் பெற முயல வேண்டும்.''

8. கிரௌஞ்சனை அழித்தல்

தாரகாசுரன் முதலான அசுரர்களை அழிப்பதற்காக முருகப்பெருமான் புறப்பட்ட காலத்தில் வழியில் கிரௌஞ்சமலையும் தாரகாசுரனது மாயாபுரியும் தோன்றின. நாரத முனிவர் முருகப் பெருமானிடத்து, அகத்திய முனிவரின் சாபத்தினால் கொடூரம் வாய்ந்த அசுரன் மலையாக மாறியிருப்பதையும் அவனை அழிக்க வேண்டுமெனவும் கூறினார்.

முருகனுக்கும் தாரகாசுரனுக்கும் இடையே கடும் போர் நடந்த காலத்தில் தாரகன் தன் மாயையினால் தேவர்ப் படைகளைக் கிரௌஞ்ச மலையினுள் நுழையச் செய்தான். மாயையான அம்மலை அனைவரையும் அறிவிழக்கச் செய்தது. அப்பொழுது முருகப்பெருமானது வேல்படை கிரௌஞ்ச மலையை அழித்தது.

இச்செய்தி, அருள் முருகாற்றுப்படை, இயல்முருகாற்றுப்படை ஆகிய இரு நூல்களில் கூறப்பட்டுள்ளது.

''குன்றம் எறிந்த கோவே போற்றி''
-(அருள்: 18)

என்று அருள் முருகாற்றுப்படையிலும்,

''குன்றெறி குமரன் குராநிழல் கொற்றவன்''
-(இயல் : 13)

என்று இயல் முருகாற்றுப்படையிலும் கூறப்பட்டுள்ளது.

9. கெசமுகாசுரனை அழித்தல்

மேருமலையின் தென்பால் அமைந்த நாவலந் தீவில் உள்ள ஏமகூட மலையின் அருகே உள்ள மாயாபுரத்தைக் கொடுங்கோல் ஆட்சி செய்த அசுரன் கெசமுகாசுரன்; சூரபதுமனின் இளைய சகோதரன்; தன் மூத்த சகோதரர்களாகிய சூரபதுமன், சிங்முகாசுரன் ஆகியவர்களோடு சேர்ந்து தேவேந்திரனையும் எமனையும் அடிமைகளாகச் செய்தவன்; திருமாலை வென்று, போரில் திருமால் விடுத்த

நேமிப்படையை ஆரமாகக் கழுத்தில் அணிந்தவன் ;

வானவர்களைச் சிறைமீட்க, முருகப்பெருமான், இந்த யானைமுகம் படைத்த அசுரனான தாரகனோடு போர் புரிந்தார். தாரகன் மாயவித்தையினால் பல்வேறு வடிவங்களைக் கொண்டு போரிட்டான். சிவபெருமானிடமிருந்து வரத்தினால் பெற்ற பாசுபத அஸ்திரத்தை விடுத்தான். இறுதியில் முருகப்பெருமான் விடுத்த வேலால் மார்பு பிளக்கப்பட்டு இறந்து போனான்.

இச்செய்தி, இந்நூலில் வருமுருகாற்றுப்படை -II இல் கூறப்பட்டுள்து

''குஞ்சர முகத்தோன் ஐந்து கரத்தோன்
கெசமு காசுரன் புரஞ்சூரைக் காரன்
ஒன்றவரா காலன் வன்னி மேரு
கொண்டல் போல ....

-(வரு- I :3-40)

என்பதால் தாரகனைக் கொன்ற செய்தியை அறியமுடிகிறது. இந்நூலில் தாரகன் என்ற பெயர் சுட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முருகனைப் பற்றிய புராணக் கதைகளில் மற்றொரு சஜமுகாசுரன் சுட்டப்படுகிறான். அசுரர் நகரைக் காத்த வீரன்; முருகனின் தூதுவர் வீரபாகு சூரனிடம் தூதுவராகச் சென்ற காலத்தில், வீரபாகுவைத் தடுக்க ஒரு குன்றையே பறித்தெடுத்து வீசிய அசுரன்; ஆயிரம் யானை முகங்களைக் கொண்ட வீரபாகுவோடு நடந்த போரின்போது ஆயிரம் துதிக்கைகள் அறுபட்டு மாய்ந்தவன்.

வருகாற்றுப்படை-I இல் கூறப்பட்டுள்ள கசமுகாசுரன் முருகவேளால் அழிந்தவன். ஆதலால் தாரகன், கசமுகாசுரன் என்று சுட்டப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

10. முருகப் பெருமானும் திருஞான சம்பந்தரும்

கூன் பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் தன் முன்னோர்கள் பேணிய சைவ சமயத்தைக் கைவிட்டு, சமணர்களின் சொல் வலையில் சிக்கி, சமணனாகிய சைவ ஒழுக்கத்தை கைவிட்டான். எனவே சமண சமயம் செல்வாக்குப் பெற்றது. இதைக் கண்டு வருந்திய, கூன் பாண்டியனின் தேவியாகிய மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறையாரும் சைவகுரவர் விளங்கிய திருஞான சம்பந்தரை மதுரைக்கு வருமாறு

வேண்டினர். வேண்டுகோளுக்கு இணங்கி, ஞான சம்பந்தர், மதுரைக்கு வந்தார். மதுரையில் அவர் தங்கியிருந்த மடத்திற்கு, பகைவர்களான சமணர் தீ வைத்தனர். அத்தீ பாண்டியனது உடலைப் பொருந்துமாறு பற்றிச் சென்றது.

அதன் காரணமாக, எவராலும் போக்கமுடியாத வடவாமுகாக்கினி போன்ற சுரநோய் பாண்டியனுக்கு ஏற்பட்டது. அந்த நோயையும் அவனுக்கிருந்த கூனலையும் போக்கியருளினார் சம்பந்தர். அவர் சமணர்களை வாதிட்டு வென்றார். வெந்தழலில் இட்ட ஏடு வேகாதவாறு அலை வாதம் செய்தும், வையை நதியில் இட்ட ஏடு நீர்வழியடே போகாமல், நீரை எதிர்த்து மேற்குத் திக்காகச் செல்லுமாறு புனல்வாதம் செய்தும் சமணரை வென்றார். தோற்ற சமணர்கள் பேசமுடியாத ஊமைநிலைக்கு உள்ளாக்கிக் கொடிய கழுவேறினர்.

இவ்வாறு சைவநெறி தழைக்க முருகப்பெருமான், ஞான சம்பந்தராக அவதரித்தார் என்ற கருத்து நிலவி வருகிறது. இச்செய்தி சேய் முருகாற்றுப்படையில் காணப்படும்.

''கொற்றவ னிறைவன் குலாவுசம் பந்தன்
மதுரையில் சமணரை வான்கழ வேற்றி
நதிதனில் வேகம் நற்றியே விடுப்போன்''

-(சேய் : 12-14)

பகழிக்கூத்தர் இயற்றிய திருச்செந்தூர் பிள்ளைத்தமிழில், சப்பாணி பருவத்தில் இச்செய்தி அமைந்துள்ளதை காணலாம்.

''பௌவமெறி கடலாடை உலகிலொரு வேடுவன்
பறவைக்கு நிறைபு குந்த
பார்த்திவன் பாவையும் இயற்குலச் சிறையும்
பணித்தருள் முதரை புக்குத்
தெவ்வரிடு திருமடத் தெரிசெழிய னடலுறச்
சென்றுபற் றுலும்எ வர்க்குந்
தீராத வடவையனல் வெப்புமுது கூனும்
திருத்தியொரு வாது வென்று
வெவ்வழலில் எழுதியிடும் ஏடும் பெருக்காற்று
விட்டதமி ழேடும் ஒக்க
வேகாம லெதிரே குடக்கேற வெங்கழுவில்
வெய்யசமண் மூகர் ஏறச்
சைவநெறி ஈடேற வருகவுணி யக்குழவி
சப்பாணி கொட்டி யறருளே . [10]

---

[10] திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் சப்பாணிப் பருவம் ; பாடல் எண்.33

என்பதால் முருகப்பெருமானே சமணர்களை வீழ்த்தும் பொருட்டு திருஞான சம்பந்தராகப் பிறப்பெடுத்தார் எனும் செய்தியை அறிய முடிகிறது.

11. அடியார்களின் வேண்டுதல்

முருகப் பெருமான் எல்லாவற்றையும் அறிந்திடும் வல்லமை உடையவன். தன்னை வணங்கும் அடியவர்களின் தீவினைகளைப் போக்கி, செல்வம், வீடு, ஞானம் முதலியவற்றைக் கொடுக்கும் தன்மையுடையவன். அடியார்கள் முருகனிடம் தங்கள் துன்பங்களை நீக்கி, அருளை வழங்குமாறு வேண்டி நிற்கின்றனர்.

''வாக்கும் பொருளும் பயனும் திருவும்
ஆக்கும் குமரா உனையல திலையே''

(அணி : 76,77)

என்றும் அணிமுருகாற்றுப்படையிலும்,

''ஆறு நிலையினும் அடியவர் மனதினும்
கூறுந் திருத்தணிக் குன்றினும் பதியினும்
இனிது வீற்றிருக்கும் புனிதா போற்றி''

(அருள் : 15-17)

என்று தம்மீது பற்றுக் கொண்ட அடியார்களின் மனத்திலும் கோயில் கொண்டிருக்கக் கூடியவன் முருகப்பெருமான் என்பதும் தீவினைகளை வேரோடு களையக் கூடியவன் என்பதாலும் மனத்துயரைப் போக்கும் வல்லமை வாய்ந்தவன் என்பதாலும்

''வினைப்பகை அறுக்கும் விமலா போற்றி''

(அருள் : 23)

''மனத்துயர் கெடுக்கும் மணியே போற்றி''

(அருள் : 25)

என்று அருள் முருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளதால் அறியலாம். இறைவனை வேண்டி நிற்கும் நிலை,

''அஞ்சினார்க்கு முன்நடந்தவனே ஓங்கெடுத் தருளி
நித்தமும் சரவணபவ நிமலாவெனத் தொழுதும்

பக்தியடி யார்க்குப் பழம்பொரு ளளித்து
முக்திதர வேண்டும் முழுமலைச் சுடரே.''

(இயல் : 26-29)

என்று இயல் முருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளது. தீவினைகளை அழிக்கவேண்டுமென,

''சிவசிவ துஷ்டரைக் குத்திபில்லி வஞ்சனை
சூனியஎப் பேர்பட்ட பலதுஷ்ட தேவதைகள்
சங்க ரித்துவிடு! சங்க ரித்துவிடு!
வாவா சகல தோஷங் களையும்
சகலபா வங்களையும் சகலவியா திகளையும்
சகலவிஷங் களையும் நீர்த்துளி யாக்கிவிடு''

(வரு II : 76-81)

என்றும்,

''என்னை எதிர்த்த பேயும் பிசாசும்
பில்லி சூனியம் எப்பட்ட கிரகங்களையும்
எரிஎரி வேலால் திரிதிரி வேலால்
கட்டு கட்டு முட்டு முட்டு
வெட்டு வெட்டு குலைகு லைத்து
நடுநடுங்கி நாச மாகவே சுவாகா''

(ஒரு : 41-46)

என்று கூறப்பட்டிருப்பதோடு, என் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும். மனத்தில் வீற்றிருக்க வேண்டும். விரைவினில் முன்னால் வருதல் வேண்டும் ஆகிய செய்திகளை,

''வந்தென முன்னின் இட்டாக மியங்கள்
எமக்கே இனிதுர ....''

(வரு.II : 62-63)

என்றும்,

''பச்சை மயிலும் பரிந்தென் னிதயத்து
இச்சை யுடனே இனிதமர்ந் தருளே''

(வேல் : 38-39)

என்றும்,

''ஏற்றுவே னென்முன் னமைப்பில் வருக''

(ஒரு : 40)

என்றும்,

''வாழி யென் றேத்தி மலரடி வணங்க
வேண்டிய தளவாய் விரைந்தினி தளிக்கும்
அண்டர்நா யகனே அறுமுகத் தரசே
எமதுயிர் துணையே! இரட்சிக்கத் தேவே!

என்றும் வேண்டி நிற்பதால் அறிய முடிகிறது.

ஆற்றுப்படை நூல்கள்

(மூலமும் உரையும்)

1. அணிமுருகாற்றுப்படை

பரங்குன்றில் பன்னிருகை கோமான் பொற்பாதங்[1]
கரங்குவித்தே[2] கண்குளிரக் கண்டே[3] - சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாய்க் கொண்டே புகல்.

ஓம்செய சிவசுப் பிரமணி யாபவய
பவாய நமசொற் கந்த சுகந்தா!
அடியார்க்குச் சொற்கந்தா கந்தா சுகம்ஓம்
இந்திரன் இடமும் சந்திரன் வலமும்
ஏழு கடலும் வழுவறு வானமும்

மாசறு சோதியும் வீசிய வெயிலும்
தாமரைத் தடமும் பூமலர்ப் பொழிலும்
கற்பகக் காவும் பரம ராகமும்
வண்டமிழ் மறைசேர் சண்ட மாருதமும்
சிவனெறிச் செல்வமும் தவனெறிச் சைவமும்

1. நன்பாதம் 2. கரங்கூப்பி 3. கண்டு

★ ஆற்றுப்படை தொகுப்பில் அமைந்துள்ள உரை பதிப்பாசிரியரால் தரப்பட்டுள்ளது.

சக்கர பாணியும் விக்னேஸ் பரனும்
நலம்புரி யோனும் வலம்புரி பாகனும்
போற்றிய பொன்மையும் மாத்திய மகிபரும்
எழுதிறத் தீசனும் தொழுகடல் சுருதியும்
எண்டிசைத் திகிரியும் அண்டருக் கரசும்

அங்குசத் தவனும் சங்குசக் கரனும்
பெருக்கிய பெருமறைச் சுருக்கிய தோன்றலும்
நற்சர வணையும் அற்சுத வருளும்
மாசறு சோதியும் ஈஸ்வர வடிவும்
ஆகத் தோன்றிய வேகத்தோ ருருக

ஆன்ற பச்சை ஈன்ற சுடர்மணி
மரகத வைரம் விரவிய நீலம்
நித்திலம் பவளக் கொத்துடன் இலங்கச்
சொல்ல அரியக் கல்லப் பதியில்
ஈன்ற மேகம் ஊன்றிய பொழிலுள்

தேன்மா குழவியை வானவர் முன்னே
மணமது கொண்டு பிணிபல தீர்த்து
வருகரு மேனி எரிகன லாகியும்
பேரன்பர் தம்மை பொன்னூ புரமும்
உந்து கணைக்கால் விந்து குறங்கு

அரைத்தாள் மறரி ஒருவர்க்கு நெற்றி
எரிவாழ்வு வயிறு திருமார்பில் ரோமம்
புயமே எழுச்சி மனமே மலரோன்
எழுத்தி லாயன் கழுத்தில் அய்யன்
ஒருதோள் ஈசன் ஒருதோள் பார்வதி

ஒருதோள் மாதவன் ஒருதோள் நான்முகன்
ஒருதோள் சந்திரன் ஒருதோள் இந்திரன்
ஒருதோள் சுருதி ஒருதோள் பருதி
ஒருதோள் பூமகள் ஒருதோள் நாமகள்
இருதோள் சப்தரிஷியும் வருணனு மாகப்

பன்னிரு தோளும் நன்னிலம் சிறப்ப
ஓங்கிய திருக்கையில் வாங்கிய வேலும்
ஆவலம் கொண்டு சேவலங் கொடியும்
அங்குச மயிலோர் தங்கிய சூலமும்
வீசுவில் தண்டும் பாசக் கரமும்

வச்சிர மழுவாள் மெச்சிய கடகம்
துலங்கிய நேரத்தில் நிலங்களோ டிலங்க
ஈறாறு உறுப்பு ஈராறு கையும்
கூற அரிய ஆறு முகத்தில்
ஒருமுகம் ஈசன் ஒருமுகம் திருமால்

ஒருமுகம் நான்முகன் ஒருமுகன் ஆதித்தன்
ஒருமுகம் சந்திரன் ஒருமுகம் வினாயகன்
உந்த திருமுகம் பெற்ற கருணையன்
தொந்த காதினில் ஆர்ந்த தோடினன்
கொன்றைசெங் குரவ மன்றலர் வன்னி

தேய்ந்த் சிறுபிறை ஆய்ந்த முடியினன்
பவளம் பூத்த தவள மேனியன்
அண்டரும் அறியா எண்டிசை யாதி
நஞ்சணி கண்டன் பிஞ்சணிப் பிறையன்
ஆடும் பாம்பணி நீடும் விணாயகன்

கணங்கள் பூதம் வணங்கி யேத்தப்
புலித்தோல் உடுத்துப் பலிச்சோ றேந்திப்
பைவா ளரவம் போய்வாழ் முடியினன்
இயல்சேர் தோகை மயில்மேல் ஏறி

ஞாலம் சுழல வேலும் சுழற்றி
கால காலன் போலத் திரியும்
சூரன் உடலை வேரறத் துணித்து
ஒப்புகைக் கெதிரிலை யெப்பு விடத்தும்
பரம இன்னரும் உரிமை பூண்டு

வள்ளி பாக மெல்லென வைத்தும்
பூங்கொடி மகளிர் வீங்கிள முலைமேல்
மணந்து புணர்ந்து மகிழ்ந்தும் புகழ்ந்தும்
ஏற்ற அரிய எம்பெரு மானே!
கூத்தன் தந்தருள் கோமளக் கன்றே! (75)

வாக்கும் பொருளும் பயனும் திருவும்
ஆக்கும் குமரா உனையல திலையே (77)

....





அணிமுருகாற்றுப்படை

வெண்பாவின் பொருள்

திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியுள்ள பன்னிரண்டு கைகள் உடையவனாகிய தேவர்களின் தலைவனாகிய முருகப்பெருமானின் பொன் போன்ற பாதங்களை, கைகளைக் குவித்துக் கண்கள் குளிரும்படியாகக் கண்டேன். நெஞ்சே! வாடாத மலரைக் கையில் கொண்டு அணிமுருகாற்றுப்படையை ஆராதனையாகக் கொண்டு செல்வாயாக!

(1-3 அடிகள்)

ஓம் செய சிவ! சுப்பிரமணியா! உன்னை நான் வணங்குகிறேன். அடியவர்களுக்கு வீடு பேற்றினையும் நன்மையினையும் தந்தருள்வாயாக!

(4-17அடிகள்)

இடப்பாகத்தில் இந்தரனும் வலப்பாகத்தில் சந்திரனும் ஏழுகடலும் குற்றமற்ற வானமும் மாசற்ற சோதியும் தென்றலோடு சேர்ந்த வெயிலும், தாமரை மலர்கள் நிறைந்த நீர்நிலையும், பூக்கள் நிறைந்திருக்கின்ற பூமலர்ச் சோலையும், கற்பகச் சோலையும் இனிய இசையும், சிறப்புமிக்க வளப்பம் மிகுந்த தமிழும், வேத ஒலி நிறைந்த பெருங்காற்றும்,சிவனெறிச் செல்வமும் தவநெறிச் சைவமும் விளங்கும் இப்பேருலகில், திருமால் விநாயகனும் பிரம்மனும் அரசர்களும் ஏழுநிறம் கொண்டு விளங்குகின்ற ஈசனும், வணங்குதற்கரிய வேதமாகிய கடலும், அட்டதிக்குகளுக்கும் ஒளியைப் பரவச் செய்யும்

சூரியனும், வானோர்க்கு அரசனாக விளங்குகின்ற அங்குசத்தை ஏந்தியவனாக விளங்குகின்ற இந்திரனும் ஓங்கச் செய்த மறைகளின் சுருக்கமாகத் தோன்றியவனே!

(18-28 அடிகள்)

கங்கையில் நல்ல சரவணப் பொய்கையில் முறைமையோடு குற்றமற்ற ஒளியினால், சிவவடிவு கொண்டு தோன்றி, நல்ல கதியை அடைய வேண்டி நிற்போர், மனம் உருகி நிற்க, மாட்சிமைப்பட்ட பச்சைநிற மேனி கொண்ட உமையாள் பெற்றெடுத்த ஒளிர்கின்ற மணியே! மரகதம், வைரம், ஒன்று கலந்த நீலம், முத்து, பவளம் ஆகிய இரத்தினங்கள் கோத்திருக்கின்ற கொத்துகள் விளங்க, சொல்வதற்கு அரிய மலைப்பகுதியில் மேகங்கள் ஈன்றெடுத்தாற் போலக் காட்சியளிக்கும் சோலையில் தேன்மா குழவியான வள்ளியைத் தேவர்கள் போற்றும்படியாகத் திருமணம் செய்து கொண்டு, பேரன்பு கொண்ட அடியவர்களின் கரிய மேனியாக்கும் கொடிய நோய்கள் பலவற்றையும் நீக்கி, எரிகின்ற நெருப்பு போல மிளிரச் செய்பவனே!

(29-42 அடிகள்)

பொன்னாலாகிய காற்சிலம்புடன் கூடிய திரண்ட அழகிய கணைக்கால், விந்து, தொடை, முழங்கால், நெற்றி, வயறு, உரோமங்கள் நிறைந்த மார்பு ஆகியவற்றை உடையவனே! புனத்தில் பார்வதியும், மனத்தில் நான்முகனும், எழுத்தில் திருமாலும், கழுத்தில் ஈசனும் விளங்கப் பெறுபவனே! பன்னிரு தோள்களில் ஒவ்வொரு தோளிலும் முறையே, சிவபெருமான், பார்வதி, திருமால், நான்முகன், சந்திரன், வருணன் ஆகியயோர் விளங்கப் பெறும் தோற்றப் பொலிவைக் கொண்டவனே!

(43-52 அடிகள்)

உலகம் சிறக்கும்படியாக அழகிய கைகளில் வாங்கிய வேலும், ஆசையுடன் சேர்ந்த சேவல்கொடியும் அங்குசமும் மயிலும் கையிலேந்திய சூலமும், வீசுகின்ற வில்லும் தண்டும், பாசக்கரமும், மழுவும், வாளும், சிறந்த சடகமும் கொண்டு தோன்றுகின்ற ஆறுமுகனே! ஆறுமுகங்களில் ஒவ்வொரு முகத்திலும் முறையே சிவபெருமான், திருமால், பிரம்மன், சூரியன், சந்திரன், விநாயகன் ஆகியோர் பொருந்த விளங்குபவனே!

(53-63 அடிகள்)

மிகுந்த கருணை கொண்ட முகத்தை உடையவனும் தொங்குகின்ற காதுகளில்

விளங்குகின்ற பெரிய தோடுகளை அணிந்தவனும் கொன்றையுடன் செங்காந்தன், காட்டில் மலர்கின்ற வன்னி ஆகியவற்றால் தொடுக்கப்பட்ட மலர்மாலையைச் சூடியவனும் இளம்பிறையை அணிந்த சடாமுடியை உடையவனும் பவளம் போன்ற சிவந்த நிறமும் வெண்மை நிறமும் ஒன்றுசேர்ந்த மேனி வண்ணத்தை உடையவனும், தேவர்களும் அறிய இயலாத எண்திசைகளுக்கும் முதலாக விளங்குபவனும், நஞ்சை அணியாக அணிந்த கண்டத்தை உடையவனும் இளம்பிறையை அணிந்தவனும், படமெடுத்து ஆடுகின்ற நாகத்தைக் கழுத்தணியாக அணிந்தவனும் விண்ணுலகிற்கு நாயகனாக விளங்குகின்றவனும் பூதகணங்களால் வணங்கிப் போற்றப்படுபவனும், புலித்தோலை அரையில் ஆடையாக அணிந்து கொண்டவனும், பலிச் சோற்றை ஏந்திய கையை உடையவனும், விடம் பொருந்திய பாம்பானது வாழ்கின்ற சடாமுடியை உடையவனுமாகிய சிவபெருமான் பெற்றெடுத்த மணியே! அவ்வீசனது ஒளியில் இருந்து தோன்றியவனே!

(64-75)

அழகிய தோகைகளை உடைய மயில்மீது ஏறி, உலகம் சுழலும் படியாக வேலை வேகமாகச் சுழற்றி, எமனைப் போலத் திரிந்த சூரபன்ம அரக்கனை வேரோடு அழித்த, உனக்கு ஒப்பாகக் கூறத்தக்கவர் எவ்விடத்தும் யாரும் இல்லை. சிவனுக்கு அரிய மகனாக உரிமைபூண்டு, வள்ளியை வலப்பக்கத்தில் இருத்தி, அவளை மணந்து ஒன்று கூடி மகிழ்ந்து, அடியார் புகழ்ந்து போற்றுவதற்கு அரிய எம்பெருமானே! அம்பலக் கூத்தனாகிய நடராசப் பெருமான் பெற்றெடுத்த கோமளக் கன்றே!

(78-79 அடிகள்)

அடியவர்க்கு வாக்கும் பொருளும் பயனும் செல்வமும் கொடுக்கின்ற குமரனே! உன்னையல்லாது எனக்கு வாழ்வில் எந்தப் பற்றுக் கோடும் இல்லை.

2. அருள் முருகாற்றுப்படை

அருளா லுலகம் அமர்ந்தினி தளிக்கும்
தெருளாப் பருவத் திரியம்பதி[1] குமரா!
கங்கை மைந்தா! கார்த்திகை சிறுவா!
மங்கை ....[2] வழிபடு தேசிகா!
கண்ணன் மருகா! கணபதி சோதரா!

வண்ண மரகத மாமயில் வாகனா!
அமையாக் கருணை அம்புய நாட்டத்(து)
இமையாத் தெய்வ யானைக் கிறைவா!
வரிசிலை மறவர் தருகிற சிறுமி
பரிபுர கமல பாத சேகரா![3]

தென்பரங் குன்றிலும் சீரலை வாயினும்
ஆவினன் குடியிலும் அன்பே ரகத்தினும்
அழகிய குன்றுதோ ராடலும் இனிய
பழமுதிர்ச் சோலை மலையினும் என்று[4]
ஆறு நிலையினும் அடியவர் மனத்தினுங்

கூறுந் திருத்தணிக் குன்றினும் பதியினும்
இனிதுவீற் றிருக்கும் புனிதா போற்றி!
குன்றம் எறிந்த கோவே போற்றி!
வாருதி மருகா! மகபதி பிழைக்கச்
சூரனை முனிந்த வீரா[5] போற்றி!

---

1. திரியம்பிகை 2. பங்கர் 3. சோதரா 4. மாக 5. சூரா

ஆரா அமுதே! அரசே! அமரர்
சேனா பதியே! தேவே! போற்றி!
வினைப்பகை அறுக்கும் விமலா போற்றி!
நினைத்தது முடிக்கும் நிமலா போற்றி!
மனத்துணர் கெடுக்கும்[6] மணியே போற்றி!

அனைத்துள துயிர்க்கும் மாரி போற்றி![7]
ஆதியும் நடுவும் அந்தமும் இல்லாச்[8]
சோதியே! ஞானச் சுடரே! போற்றி![9]
சரவண பவனே! சண்முகா போற்றி!
குரவணி மார்பா! குமரா[10] போற்றி!

வேந்தா! போற்றி! விசாகா போற்றி!
கந்தா[11] போற்றி! செட்டி போற்றி!
கந்தா போற்றி ! கடம்பா போற்றி!
சிந்தா மணியே! செயசெய போற்றி!
போற்றி போற்றி என்றுனைப் புகழ்ந்து

சாற்றவுன் திருத்தாளைத் தந்தருள் எனக்கே[12]

அருள் முருகாற்றுப்படை முற்றும்.

....

6. அறுக்கும் 7. அனைத்துள வவர்க்கும் ஆதியே போற்றி
8. தெரியா 9. சோதிமெய் ஞானச் சுடரே போற்றி, சோதியுள் ஞானச் சுடரே போற்றி
10. கோவே 11. செந்தா 12. வோனே

ஆர். எண். 9825 என்ற எண்ணுள்ள சுவடியில் 36-ஆவது பாடலடிக்குப் பிறகும் சில பாடலடிகள் உள்ளன. அவை,

திருமக னாரைத் திகழ்தகு குன்றும்
சீரலை வாயும் ஆவினன் குடியும்
இருநிலம் வாழ்கவென் றேரக குன்றும்
ஏழிசை பாடிநின் றாடிய குன்றும்
அறுமறை யாய்ந்தாரந் தடியவர் போற்றி!
அண்மையி லேறும் அழகிய குமரன்
பருமணி சிந்தப் பாய்புன லூரும்
பழமுதிர்ச் சோலை மலைக்கிழ வோனே.

3. அருள் முருகாற்றுப்படை

(1-10 அடிகள்)

உலகம் முழுவதும தன் அருளை வழங்கிக் காத்துவரும் அச்சமில்லா இளம்பருவம் கொண்ட சிவபெருமான் பெற்ற பாலகுமரா! கங்கை மைந்தனே! கார்த்திகைச் சிறுவனே! மங்கையர் விரும்பி வழிபடும் அழகனே! கண்ணன் மருகனே! விநாயகனின் சகோதரனே! பச்சை நிறமுடைய மயிலை வாகனமாகக் கொண்டவனே! கருணையே வடிவாகக் கொண்ட தாமரை போன்ற இமையாத கண்களைக் கொண்ட தேவமகளாகிய தெய்வயானைக்குத் தலைவனே! வில்லேந்திய வேட்டுவக் குடியினரின் பரிபுரம் அணிந்த தாமரைப் போன்ற பாதங்களையுடைய சிறுமியான வள்ளியை மணந்த அழகே உருவானவனே!

(11-24 அடிகள்)

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, குன்றுதோராடல், பழமுதிர்ச் சோலை ஆகிய ஆறு குன்றுகளிலும் குடிகொண்டவனே! (அறுபடை வீடுகளும் நமது உடலிலுள்ள ஆறு ஆதாரங்களின் விளக்க இடங்கள் என்பர். அவை,

அறுபடை வீடுகள்		**தத்துவங்கள்**
1. திருப்பரங்குன்றம்	-	மூலாதாரம்
2. திருச்செந்தூர்	-	சுவாதிட்டானம்
3. திருவாவினன்குடி	-	மணிபூரகம்
4. திருவேரகம்	-	அநாகதம்
5. பழமுதிர்ச்சோலை	-	விசுத்தி
6. குன்றுதோராடல்	-	ஆக்ஞை

என்பனவாகும்.) அடியவர்களின் மனத்திலும் சிறப்புறக் கூறும் திருத்தணிகைக் குன்றிலும் அருள்கூர்ந்து இனிதே வீற்றிருக்கும் தூய்மையானவனே! குன்று வடிவிலிருந்த கிரௌஞ்சனைப் பிளந்து கொன்றவனே! கடலில் துயில்கின்ற திருமாலின் மருமகனே! இந்திரன் பிழைக்க, கடலின் நடுவே மாமரமாக நின்ற சூரனைக் கோபித்து அழித்த வீரனே! கிடைத்தற்கரிய அமுதம் போன்றவனே! அரசே! தேவர்களுக்குச் சேனாதிபதியே! தேவா! தீவினையாகிய பகையினை அறுக்கும் தூய்மையானவனே! நினைத்த செயல்களை முடிக்கும் தூயனே! வாழ்வாயாக!

(25 - 36 அடிகள்)

துன்பங்களை அழிக்கும் தூயமணியே! அனைத்துலக உயிர்களையும் காப்பாற்றும் அருள்மழையாக விளங்குபவனே! முதலும் முடிவும் நடுவும் இல்லாத சோதி போன்றவனே! அறிவு விளக்கே! சரவண பவனே! சண்முகனே! சிவந்த செங்காந்தள் மலர்களை அணிந்த தோள்களை உடையவனே! குகனே! அரசனே! விசாக நட்சத்திரத்தில் தோன்றியனே! செந்தில் வேலவனே! செட்டியாக விளங்கியவனே! கந்தனே! கடம்பமாலையை அணிந்தவனே! ஒளி மிகுந்த மணியே! எப்பொழுதும் உன்னை புகழ்ந்து வணங்கிடவே உனதருளை நீஎனக்குத் தருவாயாக!

....

3. இயல் முருகாற்றுப்படை

கந்த னெந்தன் கருத்துறைக் கடவுள்
ஒருபிறப் பதனில் இருபிறப் பாளன்
மூன்று வண்ணமாய் மூறி [1]வளர்ந்து
நால்............... வேள்வி அமைத்த[2]
தங்க முதலெழுத் தோது எண்வகைக்

கொன்பது வாசல்[3] ஒருமுகப் படுத்தி
பத்துத் திக்கும்[4] பரிவுறப் புகுந்து
எத்திசை யோர்க்கும் இத்துறை கேள்வி
சங்கையோன் சடையோன் கந்த சுவாமி
கடகரி முகுந்துக் கணபதிக் கிளையோன்

---

1. முத்தி
2. நால்வகை வகுப்பினை வகைவேள்வி அமைந்த
3. வாசலும்
4. திக்கினும்

சுவடி எண்.1787 -இல் அமைந்துள்ள நூலில் இந்நூலின் முதல் பத்துப் பாடலடிகள் இல்லை. அவற்றுக்குப் பதிலாக உள்ள பகுதி இங்கே தரப்பட்டுள்ளது.

ஓம் நமசிவாய நம செய செய
சுப்பிரமணிய வாய நம ஓம்
இரத்தியுங் கிழத்தியும் கீர்த்தியும்
கலியும் ஐயும் சவ்வும் சிவாயநம
வருக வருக மயூர வாகனா!
வாவா சுப்பிர மணியா!
துங்க மயூர காள கண்டா!
வா வா ஓம் இறீங் இறீங்
கிறியும் ஓம் வா நம சிவ ஓம்
அகோ விராறை தருட வறுமுக
சூர அரகரபர சிவாய நம.

திருமால் மருகன் செய்ய சேவகன்
தெய்வ யானையும் வள்ளியும் சேர்ந்தோன்
குன்றெறி குமரன் குராநிழல்[5] கொற்றவன்
என்றும் இளையோன் எத்திசைக் கிறைவன்[6]
கடம்பணி தாரோன் கந்தனென் சென்னியன்

மூவிரு முகமும் முகத்திரு கண்ணும்[7]
காதறு ரெட்டியும் பவள மேனியும்[8]
விளங்கமணி யாரமும்[9] வீரப்பிர தாபமும்
சிவயநம வென்ற[10] திருநீற்றுக் காப்பும்
கண்டனற் கினிய கலைதரு முருகன்[11]

வேண்டார் தம்மைச் சூர்களை வித்தும்
அமரர் பதியைக் காத்தருள் செய்தும்
குதிரை முகத்தின் குன்றைக் கெடுத்தபின்[12]
மதுரைநக் கீரர் வடதமி ழாய்ந்து[13]
முருகாற்றுப் படைத்து முகமலரந் தருளியும்

அஞ்சினார்க்கு முன்நடந்தவனே ஓங்கெடுத் தருளி[14]
நித்தமுஞ் சரவணபவ நிமலாவெனத் தொழுதும்[15]
பக்தியடி யார்க்குப் பழம்பொரு ளளித்து
முக்திதர வேணும் முழுமலைச்[16] சுடரே

இயல் முருகாற்றுப்படை முற்றும்.

5\. சூர்குல 6. ஏற்றினார்கள் கௌயோன் 7. ஆறிரு நயனமும்
8\. அ. அழகிய முறுவலும் மகரத் திரட்டியும்,
ஆ.ஆறிரு முகமும் அழகிய முறுவலும்
9\. மார்பும் 10. வெனும் 11. கலைதெரி முக்கண் 12. யெடுத்தபின்
13\. அ. முகமலர்ந் தருளி திருச்செவி யேற்றி
மதுரைநக் கீரர் வடதமி ழாய்ந்து,
14\. திருச்செவி சாற்றி வான்சிறை விடுத்துங்
அஞ்சினார் தன்முன் நடந்தவ னென்று
15\. ஓங்கெடுத் தருளி நித்தமு சரவணபவ
நிமலா யென்ன காலாய வேத
16\. முழுமுதற்

சுவடி எண் 1787 - இல் அமைந்துள்ள நூலில் இந்நூலின் இறுதி இரண்டடிகள் இல்லை. அவற்றுக்குப் பதிலாக உள்ள பாடலடிகள் இங்கே தரப்பட்டுள்ளன.

காலாய வேதநாயகா விமல சுரூபாய
விசாக நட்சத்திர பவசுப்பிர மணியா!
கியலாச வரசிங்க ரூபவீர பத்திரா!
ஆரோயம்ப வாய முதனாத புவனவசீகர
விசிமபார புரோமத் தாரணடி தடசங்கார!
திரிபுர சங்கார புவரசங்கராதி
செயாட லீலசென்ன விரேஸ பார!
இராவண சங்கார இலங்கா தகனார
மவாகார சீராபத் திருளி ஒளியே!
ஈசுர ருத்திரா ராதிசங் கார
ரமயசூர சங்கரராய அகோர சங்கரராய
யிரயிடாடா கெட சாய
திருச்செந் தூரா பூதசங் காரா
புகரு புருகுண குணம மாத
யேக முகம்பயி ரதாப ககன
மேமச சூலக பாலாவே லாயுதா!
சகல இந்திர தேவதை சங்கார
சகல தந்திர தேவ சங்கார!
சத்துரு சங்கார பிரசண்ட மிண்ட
கண்ட காமிரார அய்யனும் கடல்களும்
மிருண்ட ருண்டி மாலாய வீர
சங்காராய் விருப்பார் சீரனு
கால கால கால
லிலி நிலி ரிலி ரிலி
லுலு சூலி சூலி
பிறம பிறமலிதுள வீணா
குமார முருகா பவசத்துரு நாசம்
போத வினாதசம் விக்கின வினாசம்
சீறுவலி னாசம் சம்பா சார
சார மார மாரம பார
மகீப மயேசுர சிவது சதுர
சிவாய நமஓம் அய்யும் கிலியும்

கிலியும் சிறியு மறியும் பவ்வும் சவ்வும்
சரவண பவஓம் சரவொளி பவஓம்
சங்ஙாதி பவஓம் திரிபுர பவஓம்
திகழொளி பவஓம் திருவண பவ.

மந்திர முருகாற்று முற்றும்.

வேலாயுதக் கடவுள் துணை.

ஸ்ரீ ராமசெயம்.

இயல் முருகாற்றுப்படை

(1-8 அடிகள்)

கந்தன் என்னுடைய மனத்தில் வாழுகின்ற கடவுள் : அவன் அந்தணனாகிய இரு பிறப்பை உடையவனாக விளங்குபவன் மூன்று வண்மையில் வளர்ந்து, வேள்விகளால் தொழப்பட்ட பிரணவத்தின் முதல் எழுத்தானவன்: தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருளுடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை என்னம் எட்டுக் குணங்களின் இருப்பிடமாய் விளங்கி, ஒன்பது வாசல்களைத் தன் உடலில் கொண்டவர்களான அடியார்களின் ஐம்புலன்களையும் ஒருமுகப்படுத்துபவன்; புவி எங்கும் நிறைந்து, எத்திசையோடும் வணங்கும் தன்மை உடையவன்;

(9-15 அடிகள்)

சங்கைக் கையில் கொண்டுள்ள திருமாலும் சடையோனாக விளங்கும் சிவனும் வணங்கும் கந்தனே! யானை முகமுடைய கணபதிக்கு இளையவனே! திருமால் மருகனே! சிறந்த சேவல் கொடியை உடையவனே! தெய்வயானையையும் வள்ளியையும் மணந்தவனே! குன்றேறி நின்ற குமரனே! குரா மரத்தின் கொற்றவனே! என்றும் இளையவனே! அனைத்துத் திசைகளுக்கும் இறைவனாக விளங்குபவனே! கடம்பமலர் மாலையை அணிந்தவனே! கந்தனே! உன்னை நான் முதல்பொருளாகக் கொண்டு வணங்குகிறேன்.

(16-20 அடிகள்)

ஆறுமுகமும் பன்னிரண்டு கண்களும் பன்னிரு காதுகளும் கொண்டு, பவள நிறமொத்த மேனியையும் அம்மேனியில் ஒளிவீசுகின்ற மணியாரமும் அணிந்து கொண்டு இரும்பவனே! வீரம் மிகுந்தவனும் சிவாயநம என்று சொல்லியிடும் திருநீற்றுக் காப்பை அணிந்தவனும் கண்டவர்களுக்கு இனிய கலைகளைத் தருபவனாக விளங்கும் முருகனே!

(21 - 26 அடிகள்)

வேண்டாத பகைவர்களை வேரோடு களைந்தும், தேவருலகைக் காத்து அருள் செய்தும், குதிரை முகத்தைக் கொண்ட அரக்கனாகிய கிரௌஞ்சன், மலை உரு கொண்டபோது அவனை அழித்தவனே! திருமுருகாற்றுப்படையைப் படைத்த மதுரை நக்கீரரின் தமிழை ஆராய்ந்து முகம் மலர்ந்தருளியவனே! அஞ்சியவர்களுக்கு முன்னால் சென்று அவர்களைக் காப்பவனே!

(27 - 29 அடிகள்)

தினமும் சரவணபவ, தூய்மையானவனே! அன்று தொழும் பக்தி மிகுந்த அடியார்களுக்கு இம்மையில் பெரும் பொருள் அளித்து மறுமையில் வீடு பேற்றினையும் தந்தருள வேண்டும் குன்றில் சுடர்விடும் முருகனே!

4. சேய் முருகாற்றுப்படை

கந்தன் கடம்பன் கருணைசேர் முருகன்
வந்தெனை ஆண்டருள் மயில்வா கனத்தன்
பன்னிரு கரத்தன் பதுமபீ டத்தன்
என்னிரு கண்முன் இனிதுவீற் றிருப்போன்
வெள்ளிமா மலையின் மீதுவீற் றிருப்போன்

வள்ளி மயலால் வனந்தனில் தவித்தோன்
நாரதர் கிம்புரர் நலம்பெறும் புருவோ
ருடன்... பாடிய இசைதனை அறிவோன்
முனிகள் நாதர் முருகவென் றுரைக்க
சணுவுடன் வாக்குத் தயவருள் சுமுகன்

வெற்றிவேல் கரத்தன் வீறுசக் கிராயுதன்
கொற்றவ னிறைவன் குலாவுசம் பந்தன்
மதுரையில் சமணரை வன்கழு வேற்றி
நதிதனில் வேகம் நற்றியே விடுப்போன்
மாருத வேஷமாய் வந்திடுங் கபட

சூரனை யேற்றிய சுடரொளி மேனியான்
பரத வச்சலன் பசுபதிக் கிறைவன்
நீற்றியோர் சேவகன் நிராமய மானோன்
பொன்பதிக் கிறைவன் புதல்வியை அருள
அன்பினால் மணம்புணர் யிராப தத்தோன்

கீற்றிகன் விசாகன் கௌரிதன் பாலன்
நீற்றிவை போகன் நிறைந்த சடாக்ஷரன்
பிரணவ பஞ்சாட்சரம் பிதாவரி தனக்குக்
கருணையால் மொழிந்து கனகுரு வானோன்
சண்முக ரூபமாய்ச் சரவண நதியில்

பண்புடன் உதித்த பராபர மூர்த்தி
குடிமுழ கிரிகுண கியநா கேச
இடியென முழங்கும் எழில்பெரு தணிகையான்!
செந்தில் பதியான்! செய்யூர்(க்) கந்தன்!
நந்துற்ற சீரலை வாயுறை நாதன்!

ஆவினன் குடியான்! அழகுள மங்கையான்!
தேவர்கள் போற்றும் திகழ்பழ னத்தான்!
ஏரகந் தனிலே இமையவர் போற்ற
ஓரக மாக உறைந்திடும் சோதி!
பழமுதிர்ச் சோலை மலைதனில் பதிந்த

அழல்செறி வடிவாய்! மாரநா யகனே!
நம்பின நின்பதம் நவமணிப் பதிசூழ்
தம்பிரா னெனக்குத் தயவுநீ துரத்திப்
தோற்றம கென்றும் தீமையைத் துரத்தி
பெருத்திடும் செல்வமும் பெருமையும் நல்குவாய்

தேரூர் வீதியில் திகழ்திரு மதிளும்
போரூர் குரிய பொற்பதனே போற்றி!
போற்றி போற்றி யென்ப்புகழ் வார்முன்
காற்றிலும் வேகமாய்க் கருணையால் வருகவே.

செய முருகாற்றுப்படை

(1 - 10அடிகள்)

கந்தனாவும் கடம்பனாகவும் விளங்குகின்ற கருணை நிறைந்த முருகன், என்னை ஆட்கொண்ட மயில்வாகனன்; பன்னிரு கரங்களை உடையவன்; தாமரை மலரை இருக்கையாக உடையவன்; என் இரு கண்களுக்கு முன்னால் இனிதாக வீற்றிருப்பவன்; வள்ளியின் மீது கொண்ட மயக்கத்தால் வனத்தில் திரிந்தவன்; நாரதர், கிம்புரர் போன்றோர் இசைக்கின்ற இசையின் முழுப்பொருளையும் அறிந்தவன்; சனகாதி முனிவர்கள் 'முருகா' என்று போற்ற அவர்களுக்கு அருள்புரிந்தவன்.

(11 - 20 அடிகள்)

வெற்றி பொருந்திய வேலேந்திய கரத்தினை உடையவன்; பெருமைமிக்க சக்கரமேந்திய திருமாலுக்கு ஒப்பான இறைவன்; திருஞான சம்பந்தராக அவதரித்து, மதுரையில் சமணரைப் பெரிய கழுமரத்தில் ஏறச் செய்தவனும் நதியில் தமிழிலக்கிய ஏட்டுச் சுவடிகளை எதிரேறச் செய்தவனுமாவான்; காற்று வடிவினனாய் வந்த மாய சூரபன்மனை அழித்த சுடரொளி வீசும் மேனியை உடையவன்; அருச்சுனனுக்குப் பாசுபதம் அளித்த பசுபதியாகிய சிவனுக்குப் பிரணவ மந்திரம் உரைத்துத் தலைவனாக விளங்குபவன்; திருநீறு அணிந்தவர்களுக்குச் சேவகனாக விளங்குபவன்; நோயற்றவன் பொன்மயமான தேவருலகிற்குத் தலைவனானக விளங்குகின்ற இந்திரனின் மகளாகிய தெய்வயானையை மனமுவந்து அன்புடன் மணம் செய்துதர ஏற்றுக்கொண்ட இருதாரங்களை உடையவன்.

(21 - 35 அடிகள்)

புகழை உடையவன்; விசாக நட்சத்திரத்திற்கு உரியவன்; உமையவள் மைந்தன்; சரவணபவ என்ற ஆறெழுத்து மந்திரத்திற்கு உரியவன்; தன் தந்தைக்குப் பிரணவ மந்திரத்தின் மூலப்பொருளைக் கருணையினால் குருவாக இருந்து உபதேசித்து சுவாமிநாதனானவன்; சண்முக வடிவாகச் சரவணநதியில் பண்புடன் அவதரித்த பராபர மூர்த்தியாக விளங்குபவன்; எழில்மிக்க திருத்தணிகை மலைக்கு உரியவன்;திருச்செந்தூரில் வாழ்பவன்; செய்யூரில் உறைபவன்; திருச்சீரலைவாயில் வீற்றிருக்கும் நாதன்; திரு ஆவினன் குடியினன்; அழகு பொருந்திய மங்கையை உடையவனாகத் தேவர்கள் போற்றும் திருப்பழனத்தை இருப்பிடமாகக் கொண்டவன்; சுவாமிமலையில் தேவர்கள் போற்றத் தந்தைக்கு உபதேசம் செய்த ஞான ஒளியாக இருப்பவன்; பழமுதிர்ச்சோலை மலையினில்எழுந்தருளியிருக்கின்ற நெருப்பு வடிவாக விளங்குபவன்; அழகே உருவானவன்.

(37 - 40அடிகள்)

இத்தகைய சிறப்புகளையெல்லாம் தன்னகத்தே கொண்டிருக்கின்ற நின் திருவடிகளையே முழுவதுமாக நம்பியிருக்கின்றவனும் நவமணிகள் நிறைந்திருக்கின்ற ஊரில் வாழ்பவனுமான எனக்கு இரக்கம் காட்டி, தீமைகளை நீக்கிப் பெருஞ்செல்வத்தையும் பெருமைகளையும் தந்தருள்வாயாக!

(41 .44 அடிகள்)

தேர் ஓடுகின்ற வீதியும் திகழ்கின்ற சிறப்புப் பொருந்திய மதிலையும் உடைய திருப்போரூரில் எழுந்தருளியுள்ள பொற்றாமரைப் பாதங்களை உடையவனே! உன்னைப் போற்றி போற்றியென்று புகழ்பவர்களுக்கு முன்னால் காற்றைக் காட்டிலும் வேகமாகக் கருணையுடன் வருவாயாக!

5. பொரு முருகாற்றுப்படை

ஓம்நமமோ சிவ பவசிவவய நம:
நமசிவய நம செயசெய சிவ:
சுப்பிர மணிய பவய நம:
ஓம் ஸ்ரீறியும் கிறியும் கிலியும்
ஐயும் சவ்வும் சிவய நம:

வருக வருக மயூர வாகனா!
வால சுப்பிர மணியா வயதுங்க
மாயா மகாவீர தூண்... வருக
ஓம் கிறாங் கிறீங் ஓம்
பவநம சிவய நம:

அகோர வீரா ஆனந்த ரூப
ஆறுமுகா ரூர அரியர பரசிவ
அசுரகுல கலாப வேத நாயக
விமல சுரூப மிசாக்ஷ விராய
விசுவ சுரூப நாககங்கண காங்கேயா

கனக பீதாம்பர கார்த்திகை மயூர
அட்டிலாய கைலாய ஆதிநரசிங்க ரூப
வீர பத்திராய அகோரோற் பவய
பூததகைப் புவனசிகர விசும பரபுரோ
மந்திர புஷ்பக கந்தான தெட்சண

சங்கார திரிபுவன சங்கார செயரட்சி
லீலா சென்ன வீரேஸ்பர
இராவண சங்கார இலங்காபுரி தகனா
ஸ்ரீராம பத்திரரா யிருளி லொளிவெளி
ஈஸ்பர ருத்திரா ஆதிசங் கரரர்

★ மந்திரச் சொற்கள் அதிகமாக விரவி அமைந்துள்ளதால் இப்பாடலுக்குப் பொருள் கூறப்படவில்லை.

அசுர சங்காரா அகோர சங்காரா
பொருபொரு சணசண சண்டமாருத
யேக முகப்பிர தாபக அரக்கர்குண
கெணகாந் தருவ ருடகன் மழகல
கபால வேலாயுதா! சகல மந்திரம்

மந்திர சங்காரா சகல தெய்வப்
பிரமராட் சதசங்கார பிரேத சங்காரா
பிசாசு சங்காரா சத்துரு சங்காரா
பிறதெய்வப் பிரளய காலாய்
ஆதி வீர ஆனந்த வைரவா

அமரகுல நாயகா! அப்பிர வேச
அண்ட ரண்ட பகிரண்ட லண்ட
பிரசண்டப் பிறதூப சங்க ரூப
சரணம் சரண கால காலா
லல லல லல லல

லிலி லிலி லிலி லிலி
லுலு லுலு லுலு லூகு
லிலி லிலி விறும விறும
இதுள இதுளஅதல விதலப் பிரதேய
வடங்கு குடங்கு டொங்கு டொங்கு

விக்கின வினாசம் சர்வ வினாசம்
சார சார மார மார
மகாரூபம் கெஷ்வார சிவசதா சிவயநம
குக்குடத்து துவச குகாய நம
ஆகாய நமா சிகாய நமா

வகாய நமா வா வா மகா...
சிவய அவாய சிவபவ முருக
சாப அகோரற்பவ சிவய சிவம
ஓம் திரிபுர பவய நம:

6. வருமுருகாற்றுப்படை - I

கருமுரு காருங் குழல்வள்ளி கேல்வன் கருதலரைப்
பொருமுரு காதி பனைக்காட் டெனமன்னன்[1] போந்துசொல்ல
அருமுரு காதிற் பவன்றங் கருணை கிரியுரைத்த[2]
வருமுரு காற்றுப்படை கொண்டவ செந்தில் மன்னவனே.

ஓம்செய செய வருக வருக[3]
முருக வீரைய அவ்வாசி மானிஷப்
புண்ட ரீக யோக முகங்களிற்[4]
குண்டரக் குழைபல கண்டத் தணிந்து[5]
ஆரமும் நூலும் மார்பினில்[6] இலங்கச்

செச்சைத் தாங்கலும்[7] கச்சுடை மருங்கும்
ஆறிரு தோளும் மாலை[8] வேலும்
வாழி யோங்கிய கோழிப்ப தாகையும்
தண்டையும் மணியும் புண்ட ரீகமும்
வேதவொலி பாடும்[9] கீதகிண் கிணியும்

அதல விதல சுதல நிதல
தராதல மகாதல பாதாள லோகமும்
அண்டரன் டங்களும் எண்டிசை வெருவச்[10]
சிறகினி லெழுவரைப் பரிய வீசிய[11]
மரகத கபால நிருபரு துரக[12]

மேருவு பகுவாய்ப் ...புயங் கனவாய்[13]
கின்றார்ப்[14] பொசித்த மாருதப் பிரசண்ட
மணிலும் க..பு மயிலும்[15] பிரதாபமும்
பன்னிரு கண்ணும் என்னிரு கண்முன்
நீங்கா திருக்கப் பாங்குடன் வந்து

1. படைகாட்டு நீயென
2. காவந் தருளென் றருணை கிரியழைப்ப
3. விரைய
4. சதமா சைபுண் டரிக(அறு) முகங்களிற்
5. குண்டலங் குழைபட கண்ட மதாணியு
6. மார்புநின்
7. தொங்கலும்
8. மாறிலை
9. பாடலும்
10. பரவ
11. பரிய வீசும்
12. நிருபகுலதிலக [நிருதாதூலதிலக

என்னிடர் தீர முன்னடந் தருளச்[16]
...சுவாமி கார்த்திகேயன் வரசுப்பிர மணியா![17]
சரணம் சரணம் சரவண பவ
செய சரண கழலி[18] *சரணம்*[19]
புகுந்தெனைக் காய்ந்த மாந்தரை நீயும்[20]

இகந்த[21] *இந்திரன் பயந்த தந்தி*
சந்தனந் திமிர்ந்த கும்பம் விம்ம[22]
கொங்கை தங்கு செம்பு யத்தமா[23]
அமரர் பெரிய சிறைதனை விடுத்த[24]
தேவ தேவா தேவா ஹஸீக[24]

மூவரி மூற்றி[25] *யவ்வா கராய*
பேராஞ் சோதி தேசாஞ் சமய[26]
ஏகமாய் நின்ற யோக நாதா[27]
அபயமென் றமரர் சமயந் திரண்டு
வெனிமிது பாணி குவிற்றுப் போற்றி

போற்றி என்றேத் தியதோ டிறைஞ்சுங்
குஞ்சர முகத்தோன் ஐந்து கரத்தோன்
கெசமு காசுரன் புரஞ்சூரைக் காரன்
ஒன்றவரர் காலன் வன்னி மேரு
கொண்டல் போல

....

13. மேரு பகுவாய்(ப்) புயங்கள் பகு வாய்க்கின்
14. றார *15. கடம்பு பயிலும், கடம்பும் அயிலும்*
16. முன்னெழுந் தருளுக
17. சுவாமி கார்த்தி கேய நவாமி
18. கழலினை சரணம் என்றிருப்பின் பொருள் சிறக்கின்றது.
19. சம்பவ சரண சரணவுன் சரணம்
20. முனிந்த
21. க(னக)
22. சந்தன நதிமாந்த கும்ப விம்ப
23. செம்புய குமர!
24. ஆசி(ரி)ய
25. மூர்த்தி *26. அகோர சமயா*
27. மோக மான யோக நாதா, மேக மான யோக நாத

...ண்டு அண்ட ரண்டமும் நிமிர்ந்த
சண்ட மூஷிக மண்டி யேறு
முக்கண் மூர்த்தி விக்கின விநாயகன்
வெற்புன மளித்த கற்பகச் சோதர
புஷ்பா புரத்துறை பரம கேருச[28]

விமலா பாக[29] கமலா சன்னறி[30]
வன்னி மண்டலத் தன்ன சரிரிணி[31]
அண்டர் மண்டல[32] குண்டல நீலி
கோல கலத்தி மாலா மதத்தி[33]
மூலா வெழுத்தின் மேலா யுதித்த

காலா மொருத்தி சேலார் விழிச்சி
பகார[34] மொழிச்சி வகார மறைச்சி
யேகா வடத்தி[35] நாகா புயத்தி
ஆலா காலமுனி பாலா வேலாயுதா[36]
காலாழி மவுலி சாலாமென் மேலவர்

....

28. புஷ்பா சனத்தி லப்பர மேசுவரி
29. அமலா பார
30. சனத்தி
31. சரீரணி
32. பூதல
33. மனத்தி, மலத்தின்
34. பாலார்
35. வட்டி
36. ஆலால முனிவர் வேலாயுதா சுரர்

சுவடி எண்.1787 இல் அமைந்துள்ள நூலில் 50 ஆவது பாடலடி முதல் மாறுபட்ட பாடலகள் அமைந்துள்ளன. அவை இங்கே தரப்பட்டுள்ளன.

மூலா வெழுத்தின் னரம்வரை களத்து
மகவை யோட மொய்வரை பணிசெறி
செயவரை யாகும் மோகக் கமல
வாக்கிய சரணம் மவுளி யாருள்ள
வாத சவுரி மைத்துனன்(த) தந்தையும்
ஒத்து வாழி என்றுரைத் தோர்கள்
மாந்த ராகிலும் பிறப்பில்லை யவர்க்கே

பேரணி நெருக்கிச் சூரனை மோதி
மூரி சூரி தூரி காரி
காரு[37] வாரி மேரு கிழிந்து
அண்டர் சேனை மிண்டி ஆர்த்தெழ[38]
அறுபதி னான்கு பிரிவுட னமைத்த[39]

கார்த்தி பைரவி குமரிவீற் றிருப்ப
காது சூலமும் பூதப் படையும்
குமரி இவுளிக கவரி வீசிடக்
காள மேக தாளி குவித்துக்
குறத்தலை கூளி அறப்பெரு[40] வெள்ளமும்

நள்ளிருள் நாடுங்[41] கொள்ளிக் கணங்களும்
யேக[42] பாத பூதப் பிசாசும்
வெள்ளை மேனியில் கள்ளக் களிப்பும்[43]
பலபல வேடத் தலகை குவித்து[44]
எல்லாக் கரக வெல்லைப் பெற்றி

....

முருக வேள்சூர மர்தடிந் தான
வள்ளி புரிகுழல் மேல மாலை
தளந்தான் சரணம் அளித்தான் மேலாய்!
வானோர் வியன்சேனை தாங்கினான் மேலாய்!
விடர்தினி தளித்தன் வேற்முத் தாந்தவன்
கல்வியில் மூலமென மமித்தாந் தளர
வேதியனும் பிறவே னென னனைப
பேசரிய லத்தா ரதம்வேதம் கடந்தவென்
பேரொளி கொண்ட சைவசித் தாந்த
பூரண னேஅறி வானந்த தேசிகனே!
ஒருமுரு காவென் றுள்ளங் குளிர
உகந்துட னேவரு முருகா வென்று
வ...ய நிற்ப வகையிங்கனே
தகுமுரு காவென்று தான்புலம் பாநிற்ப
தையல் முன்னே திருமுரு காற்றுப்
படையுட னேவருஞ் சேவகனே!

பைரவர் சிறுகுடர் குறுகி யறமிக
வெகுண்டு (பரம) சுகந்தினர் மகர மெட்த்து[45]
பைரவர் கோடி பவரிநின் றாட[46]
மட்ட வில்லுக் கரடி யிடக்கையும்[47]
மடிமிடி மிடிமிடி மிடிமிடி மீயென்று[48]

அலகைகள் கலகம் உலகம் பிரமிக்க
காளி கொட்டக் கூளிநின் றாட
ஆதிவித் தான மூர்த்தி யென்றனருள்[49]
குமரா பரம தேசிக சூரா
விகட சூரசிர விகடபரா வீரார

குற்ற சூரரா தஷ்ட சூரர்
விலயிற் சூறைக் காரமார னமைத்து
நாவில் கீர்த்த பவ... த்திர
சாயி சுடர சக்கிர பாணி
அரிகரி வாத துரித சூர

....

37. தாரு
38. அண்ட கோளகை விண்டசைந் தார்ப்பெழ
39. அமர்ந்த

சுவடி எண்.696 இல் அமைந்துள்ள இந்நூலின் அறுபதாவது பாடலடியை அடுத்து இரண்டு பாடலடிகள் புதியனவாக அமைந்துள்ளன. அவை,

அகோர கோர சங்கார கோர
சமர பைரவி குமரிகை வீச

என்பன.

40. நிறைப்பெரு
41. நள்ளிர வாடுங்
42. மேக
43. கூளியும்
44. கைவிரித்துப்
45. பரம சுகத்தி னறமாக மெடுத்துப்
46. பவுரிகொண் டாட
47. டிமில நவிலும் கரடியும் இடக்கையும்
48. டிமில டிமில டிமிடிமி டிமியென்
49. வாதித் தியானன மூதி மூர்த்தி

ஆதிநா ராயணன் மூதி மாதவன்
சகல ரூபினன் அகில நாயகன்
விறைவ ரேத்து மண்ண....... [50]
.....வசவன் கோசறு பரமன்
விகட தானவன் சகடு மோதினன்[51]
நீல மேனியன் காளி[52] நாயகன்
மருக வருக என்பார் வெருவாமுனம்[53]
போற்றி போற்றியென் நின்னடி மலரிட்டு[54]
ஏற்றி[55] வார்முன் னிமைப்பினில் வருகவே.

வருமுருகாற்றுப்படை முற்றும்.

....

சுவடி எண். 696 இல் இந்நூலின் 77 ஆவது பாடலடியை அடுத்து ஆறு பாடலடிகள் புதியனவாக அமைந்துள்ளன. அவை,

அரனருள் முரு(க) பரம தேசிய
வீரா துட்ட சூரர் குத்த
சமர பைரவ சூறைக் கார
மாறன் மைத்துனன் வீர கீத்திய
வடபத்திர சாயி சுடர்சக்கிர பாணி
அரையவர் துரக சூரிய.............

என்பன.

50. விண்ணவ ரோது மண்ணல்மா விருடி
51. விகட தானவர் சகட மோதிய
52. காளிய
53. மருக முருக வருக வருக
54. போற்றி போற்றி புகழந்துனை எப்பொழுதும்
55. ஏற்று

சுவடிஎண்.696 இல் நூலின் இறுதியில் முடுகு வெண்பா ஒன்று அனைந்துள்ளது. அப்பாடல்,

நிகர மகர நிருதர் மடிய
மகர சலதி மறுகச் - சிகரி
தகரவே வேல்வாங்குஞ் சண்முகனைச் சற்றே
பகரவே போமே பகை.

வருமுருகாற்றுப்படை - I

முருக்க மலர் அணிந்த கூந்தலையுடைய வள்ளியின் தலைவனாகிய முருகனைக் காண்பிப்பாயாக என்று மன்னன் கேட்க, அருணகிரி உரைத்த வருமுருகாற்றுப்படை கொண்ட செந்தில் மன்னவனே!

(இ-ள்) (1-10 அடிகள்)

ஓம் செய செய வருக வருக! முருகனே! தாமரை போன்ற ஞான முகங்களில் குழைகளாட, மார்பில் ஆரமும் முப்புரி நூலும் விளங்க, செங்காந்தள் மலர்மாலை அணிந்து, இடையில் கச்சாடை அணிந்து, மாலை சூடிய வேலும், ஓங்கி உயர்ந்து விளங்குகின்ற கோழிக் கொடியும், தண்டையும் மணியும், தாமரையும், வேதவொலி பாடும் கிண்கிணியும் அணிந்தவனே!

(10 - 15 அடிகள்)

அதலம், விதலம், சுதலம், நிதலம், தராதலம், மகாதலம், பாதாளம் என்று சொல்லாப்படுகின்ற ஏழு வகையான பாதாள உலகங்களும் அண்ட கோடிகளும் எண்திகைகளும் அஞ்ச, சிறகினில் எழுவரை வேகமாக வீசிய மரகத கபாலம் ஏந்திய சிவனின் பிள்ளையே! சிறகினில் எழுவரைப் பரிய வீசியவனே!

(16 - 23.அடிகள்)

தோகை விரித்த மயிலும் புகழ்மிக்க பன்னிரு கண்களும் என் கண்களுக்கு முன்னில் எப்பொழுதும் மறையாதிருக்க, பாங்குடன் வந்து என் துன்பம் தீர அருள் செய்வாய்! சுவாமி! கார்த்திக்கேயா! வரம்தரும் சுப்பிரமணியா சரணம் சரணம். சரவணபவ.

(23 - 36 அடிகள்)

உன்பாதம் சரணம் அடைந்த என்னைக் காய்ந்த மாந்தரை நீ தண்டிப்பாய். இந்திரன் பெற்ற தெய்வயானையுடன் விளங்குகின்ற தேவா! போற்றி போற்றி என்று

வணங்கி உன்னைப் புகழ்வதோடு, உன்னை வேண்டிய அமரர்களைச் சிறைமீட்ட தேவ தேவா!

(37 -44 அடிகள்)

யானை முகத்தினையும் ஐந்து கரங்களையும் கொண்ட கஜமுகாசுரனின் நகரை அழித்தவனே! முக்கண் மூர்த்தியின் மகனாக விளங்குபனும் குறைகளைத் தீர்ப்பவனும் வள்ளியை மணக்கத் தினைப்புனத்தில் உதவி செய்தவனுமாகிய விநாயகனின் சகோதரனே!

(45 - 54 அடிகள்)

பரமேசுவரனின் இடப்பாகத்தில் விளங்குபவளும் தாமரையை ஆசனமாகக் கொண்டவளும் தீ மண்டலத்தைப் போன்ற உடலைப் பெற்றவளும், தேவர் உலகில் விளங்குகின்ற நீலி எனவும், கோலாகலத்தி, மாலாமதத்தி, காலாமொருத்தி, சேலார் விழிச்சி, பகார மொழிச்சி, வகார மறைச்சி, யேகா வடத்தி, நாகா புயத்தி என்று போற்றப்படுபவளாகிய உமைக்கும் ஆலகால நஞ்சை விழுங்கித் தேவர்களைக் காத்த நீலகண்டனுக்கும் தோன்றியபாலனே! வேலை ஆயுதமாகக் கொண்டவனே!

(55 - 85 அடிகள்)

பெரும்படையை நடத்திச் சென்று, சூரபன்மனின் படையோடு மோதி, அறுபத்து நான்கு படைப் பிரிவுகளைக் கொண்ட வானவர் படை கடல்களும் மலைகளும் பொடியாகும்படியாக ஆரவாரத்தோடு போர் செய்ய, சூலப்படை, பூதப்படையோடு, நன்னிருளை விரும்பும் கொள்ளிக் கணங்கள், பூதப்பிசாசுகள், வெண்மைநிற மேனியோடு மகிழ்ச்சியுடன் பலப்பலவேடங்கள் தரித்த பேய்கள் முதலானவை பைரவர் சிறுகுடல் குறுகும் படியாக வெகுண்டு போரிட, வில்லினைக் கையிலேந்தி பேய்களின் உலகம் கலக்கமடையுமாறு காளிக்கு முன்னால் கூளிகள் நின்றாடப் போர்புரிந்த மூர்த்தியே! எனக்கு அருள்புரிகின்ற குமரா! பரம தேசிகா! கொடியவனான சூரனை வென்ற முருகா!

(86 - 90 அடிகள்)

ஆதி நாராயணனும், நான்முகனும் சகல வடிவிலும் நிறைந்திருக்கும் அகிலம் புரக்கும் வானவர் போற்றும் சிவனும் போற்றுகின்ற மன்னவனே!

(91 -94 அடிகள்)

சக்கர மேந்திய நீலநிற மேனியனான திருமாலின் மருமகனே வருக! போற்றி போற்றி என்று நின் திருவடிகளை மலரிட்டுப் போற்றுவார் அஞ்சா முன்னம் நொடிப் பொழுதில் வருவாயாக!

7. வருமுருகாற்றுப்படை - II

ஹரிஓம் ஆம் அய்யும் ஓம்கறீம்
கிறியும் குரோம அய்யும் கிலியும்
சதாசிவ சண்முக சரவணபவ சண்முகபவ
சயலொளி பவ திரிபுர பவ
திகலொளி பவ பரிபுர பவ

பவமொழி பவ சயலொளி பவ
சரவண பவ வசீகர பவ
ஆய காய நமசி வாய
ஓம் கார்த்திகை ஆய
மயூர வாகனாய! தெய்வானை நாயக!

வள்ளி மணவாளா! ஆறு முகவா!
பன்னிரு காலா★ ஆடை ஆபரண
மாலிகா அருமணி வைரஅபி ஷேகரா!
பன்னிரு குழையும் பணிபல வாக்கிய
வைரத் தோடு மகரகுண் டலமும்

மொன்றை மழுவும் ஓங்குநற் கோப்பும்
கிரீடஞ் சூழ்ந்த கிளர்வெண் முடியும்
சிரித்த முகமும் செந்தூர நுதலும்
நவமணி வச்சி ராங்கி ....
பன்னிரு கரமும் பலவாயு தங்களும்

சங்குசக் கரமும் தன்னிரு புயமுமாய்
வச்சிரா யுதமும் வைர வாளும்
சூலம் வேலும் துரொட்டிய மழுவும்
சூரிகை பரிசை தோணிவில் லம்பு
கரந்தலைப் பட்டையம் கட்டாரி சொட்டை

....

★'பன்னிருகாலா' என்று முருகனைக் குறிப்பிடுதல் இல்லை. பன்னிரு கரத்தா என்பது படியெடுப்போரின் கவனக்குறைவால் இப்படி எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பிடித்த கரத்திடைப் பெருவிரல் சுத்தி
எடுத்துஆ யுதங்கள் எண்ணிலக் கில்லா
சூரன் மார்பு துளைத்திடும் வேலும்
பலவித வண்ணமாய்ப் படைத்திரு மேனியும்
கச்சுடை மருங்கில் கட்டிய ஒட்டியாணம்

சிற்றிடை அலங்கல் சேர்ந்திடும் அணிபல
வண்ணம் கலைகள் வகுத்த தொங்கலும்
வீரத் தண்டையும் வெற்றிச் சிலம்பும்
சதங்கை கிண்கிணி சல்சல் என்றிடும்
.... ஏற்றியசீர் பாதம்

சூரர் நடுங்கிய கலங்கிய பாதம்
தேவர் மூவர் சிந்தை களித்திட
ஆதி யுமையாள் அன்பா யளித்த
முருகா அன்னை பிதாவுக்.......
கரியொன மென்ன கரமறி வித்தாய்

முப்பத்து முக்கோடி தேவர் முனிவர்
எண்ணிற கோடி ரிஷிகள் புடைசூழ்
காளி கூளி கணங்கள் களித்திட
ஆழி ஏழும் அதிர முற்சதிர்
பலவாத் தியங்கள் பலவித முழங்க

வீர கன்னியர் வெற்றி கூற
தெய்வ ஸ்ரீகள் தீப மெடுக்க
ஆடல் பாடல் அரம்பையர் சூழ்ந்திட
புஷ்ப மாரி பொன்னாய் உதிர்ந்திட
சந்தன குங்கும தடமணி மார்புற

வருக முருகா வருக வருக
வள்ளிதெய் வானை சேர்த்திட்டு வீரமவர்
...... முனிவர் தந்தைதாய் பினவர்
கொற்றக் கொடியும் கோழிக் கொடியும்
எத்திசை யெங்கும் இலங்கத் துலங்கிட
கங்கடத் துலங்க கவரி நிகழ்த்த
சீர்குதி மிரத்துப் பறவை யடக்கி

சிறுமா வயிற்றி குத்திக் கிழித்துச்
செம்பத்து மத்தாள திகழ்கட முற்றும்
வருமயில் வாகனா மால்மரு காவர

முருகா சரவணா வா வா வா
வந்தென் முன்னின் இட்டகா மியங்கள்
எமக்கே இனிதுர அமுர்தினி யோகமும்
ஓம் ஆய் ஐயும் ஓம்
திருப்பெருங் குன்றுறை யாய் நம

சீரலைவாய் நம திருவாவினன் குடியாய் நம
சென்னியங் கிரியாய் நம யேரக கையாய் நம
பலகுன் றுரையாய நம பழமுதிர்ச் சோலை
மலைகீழ் வேரக நம சடாஷ்சர
ஓங்கார ரீங்கார ரூபாய நம

உமைபுதல்வா அருமருகா ஒளிபல வாக்கிய
சூர பயங்கர துஷ்ட நிக்கிரக
சிஷ்ட பரிபால காய நம
திரிலோக் கியவசீ கராயா நம
செந்தில்கந் தாய நம சிவசரவண பவாநம

சிவசிவ துஷ்டரைக் குத்திபில்லி வஞ்சனை
சூனியஎப் பேர்பட்ட பலதுஷ்ட தேவதைகள்
சங்க ரித்துவிடு சங்க ரித்துவிடு
வாவா சகல தோஷங் களையும்
சகலபா வங்களையும் சகலவியா திகளையும்

சகலவிஷங் களையும் நீர்த்துளி யாக்கிவிடு
வாவா சரவண மயில்மேல் வீரா
தண்டைக் கால! தரபார் தீதா
சரணம் சரணம் சுப்பிரமணிய சுவாமி!
சரணம் ஓம்சிவ சரவண.

வருமுருகாற்றுப்படை முற்றும்.
சுப்பிரமணியர் துணையுண்டாகவும்.
தத்துவலிங்கம் துணை.

வருமுருகாற்றுப்படை - II

முதல் ஒன்பது பாடல் அடிகள் மந்திர எழுத்துக்களாகத் தரப்பட்டுள்ளமையால் பொருள் தரப்படவில்லை.

(10-27 பாடலடிகள்)

மயில் வாகனத்தைக் கொண்டவனே! தெய்வயானையை மணந்தவனே! வள்ளியின் மணவாளனே! ஆறுமுகங்களையும் பன்னிரு கரங்களையும் கொண்டவனே! ஆடைகளையும் விலையுயர்ந்த வைரம் போன்றவை பதிக்கப்பட்ட ஆபரணங்களான பன்னிரண்டு குழைகள், வைரத்தோடு, மகர குண்டலம் போன்றவற்றை அணிந்தவனே!

மழலை ஏந்தி, ஓங்கிய அமைப்பழகோடு மணிமகுடம் சூடி, சிரித்த முகத்துடனும், சிவந்த நெற்றியினும் நவமணி ஆபரணம் தரித்த பன்னிரண்டு கைகளில் சங்கு சக்கரம், வச்சிராயுதம், வைரவாள், சூலம், வேல், மழு, சூரிகை, பரிகை, தோணி, வில், அன்பு, பட்டையம், கட்டாரி, சொட்டை முதலான பல ஆயுதங்களையும் ஏந்தியவனே!

(28-36 பாடலடிகள்)

சூரன் மார்பைத் துளைத்திடும் வேலையும் பல நிறங்களைக் கொண்ட உடலில் அரையில் கச்சாடை அணிந்து, அதன்மேல் ஒட்டியாணம் கட்டி, அச்சிறிய இடையில் வகைவகையாய் கலைவேலைப்பாடுகளுடன் கூடிய பலவண்ண ஆடையகளோடு விளங்குகின்ற அணிகளும், மாலைகளும் சூட்டி வீரத்தண்டையோடு வெற்றிச் சிலம்பையும் அணிந்து, பகைவர்கள் நடுநடுங்கும் படியான திருவடிகளைக் கொண்டவனே.

(37-51 பாடலடிகள்)

உலகில் பிரமன், திருமால், சிவபெருமான் ஆகிய மூன்று முதல்வர்களும் மனம் மகிழும் வண்ணம் உமையாள் அன்பாய் அளித்த முருகனே! முப்பத்து முக்கோடித் தேவர், முனிவர், பல கோடி முனிவர்கள் சூழ்ந்திருக்க, காளி, கூளி கூட்டங்கள் மகிழ்ச்சியுடைய, ஏழு கடலும் முழங்க, பல இன்னிசைக் கருவிகளும் இசை முழங்க,

வீரக்கன்னியர், பெற்ற வெற்றிகளைக் கூற, தெய்வப் பெண்கள் கரங்களில் வல்லவர்களான அரம்பையர்கள் சூழ, மலர் மழை பொன்னைப் போல் பொழிந்திட, சந்தனம், குங்குமம் முதலானவற்றைத் தன் பெரிய மணி ஆரம் பூண்ட மார்பில் பூசியவனே! முருகனே! வருவாயாக!

(52-64பாடலடிகள்)

வள்ளி, தெய்வயானையை மணம் புரிந்தவனே! வெற்றிக் கொடியையும் சேவல் கொடியையும் உடையவனாக அனைத்துத் திசைகளிலும் புகழோடு விளங்கியவனே! கவசம் அணிந்து தேரில் சென்று, பறவை வடிவிலான அரக்கனைக் கொன்று மயிலை வாகனமாகக் கொண்டவனே! முருகனே! மாலின் மருமகனே! வருவாயாக! எனக்கு மருமகனே! வருவாயாக! வருவாயாக! எனக்கு முன்னாள் வந்து, விரும்பியபொருளை விரும்பியவாறு அடையும் இன்பம் எனக்குத் தோன்ற அருள்வாயக!

(65-75 பாடலடிகள்)

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரு ஆவினன்குடி, சென்னியங்கிரி, ஏரகம், பழமுதிர்ச்சோலை முதலான குன்றுகளில் வாழ்பவனே! வாழ்வாயாக! உமையின் பாலனே! சுரரை, துஷ்டரை அழித்து சிறப்புற ஆள்பவனே! மூவுலகத்தையும் கவரக் கூடியவனே! செந்தில் கந்தனே! சிவசரவணபவனே! வாழ்வாயாக!

(76-85 பாடலடிகள்)

துஷ்டரை அழித்து, பில்லி, வஞ்சனை, சூனியம் முதலானவற்றிற்கு உதவும் துஷ்ட தேவதைகளை அழித்துவிடு. சகல பாவங்களையும், தோஷங்களையும், வியாதிகளையும், விஷங்களையும் நீக்கிவிடு. மயிலை வாகனமாக் கொண்ட சரவணனே வருவாயாக! தண்டைகளைக் கால்களில் அணிந்தவனே! சுப்பிரமணிய சுவாமியே சரணம்.

8. வேல் முருகாற்றுப்படை

பொன்னிற மேனியும் பொற்பமா[1] முடியும்
மின்னறு[2] முகமும் விழிபன் னிரண்டும்[3]
நீறணி நெற்றியும் நீள்கை வாயும்
கூறொணா வடிவுடை கூரிய மூக்கும்
ஆரஞ் செறிந்த அணித்திரு கழுத்தும்

பார்குண் டலங்கள் பத்திய குழையும்[4]
முந்நூல் மார்பும் முழுமணி வடமும்[5]
பன்னிரு கரத்தில் பதிந்த ஆயுதமும்
வேல்வாள் சக்கரம் வெயிலொளி வச்சிரம்
பால்நிறக் குக்குடம் பரிசைபொற் தண்டம்

வரதம் அபயம் இருதலைச் சூலம்
சரமொடு சாபம்[6] தன்கரத் தேந்தி[7]
செச்சை மாலையும் சீராய் மருங்கில்
வைத்துடுத் தியதோர் மருங்கில்வெண் துகிலும்[8]
சதங்கை தண்டைகள் தானணி கின்ற

பதங்களில் இடப்பதம் பரிவுடன் மடித்து[9]
மற்ற வலப்பதம் மகிழ்வுற நீட்டி[10]
உற்றா அட்சரம் உறுதுணை யாக[11]
*கோண மாறுங் குலாவுற வளைத்து
ஆறு கோணத்தில் தனிஆ றெழுத்தும்

வீறுடன் நிறுத்தி நடுவோங் காரம் (சிரீங்காரம்)
பூணை வளைத்துப் பொற்கொடி தெய்வ
யானையைப் புறத்தில்சிறப்புற வைத்து

---

1. புட்பார, பொற்பிற2. மின்னிரு, முன்னாறு
3. பன்னிரு விழியும் 4. குண்டலம் பதித்த குழைகளீ ராறும்
5. மும்மணி வடமும், முழுமணி வைரமும்6. சக்கரம்
7. தன்கரத் திலங்க 8. மருவில்வெண் துகிலும், மறுவிலா வெண்துகில்

மற்ற வலப்புறம் வள்ளிநா யகியை
உற்றங் கணைத்து உக்கிரமோ டிருந்து

மருள்துயர் நீங்க மனதொடும் அன்பொடும்
தேவர் தானவர் வித்தியாதவர்
பாவையர் கின்னரர் பாணர் முனிவர்
ஓம்சர வணபவ வென்று.........
நின்னுட மந்திரம் உறுதியோ டுரைத்துச்

சூழ திருபுற மதாயழல் கொண்டு
வாழியென் றேத்தி மலரடி வணங்க
வேண்டிய தறவாய் விரைந்தினி தளிக்கும்
அண்டர்நா யகனே! அறுமுகத் தரசே!
எமதுயிர்த் துணையே! ரட்சிக்கத் தேவே!

....

9. பொற்கதங் ளிடது பதமலர் மடித்து, பாதங்க ளிடத்தும் பதமடி வைத்து.
10. மற்றோர் வலத்தாள் வடிவுடன் நீட்டி,
மற்ற வலப்பதம் கீழப்பெற நீட்டி
11. உற்றஅட் சரத்து நல்துணை யாக,
உற்றஅட சரமுன் உறுதிய தாக
உற்றதேமார் அடசரம் உறுதி யாக

ஒப்பீடு செய்தபொழுத 19ஆம் பாடலடி முதல் பல்வேறு வேறுபாடுகள் காணப்பட்டதால், அவை இங்கு தரப்பட்டுள்ளன.

★1 அறுகோணந் தான்தனில் ஆறெழுத்து நடுவே
நின்றுதிக்கும் நடுவோங் காரறீங் காரத்தால்
கோணமா மறையோர் குவாவுஆங் காரத்தால்
பூண வனைத்தும் பொம்பல நிண்டைத்
தெய்வ யானையைச் சிரிடப் புறத்தினும்
உய்யவை தயங்கி உயிரத் தணைத்து
மற்றதோர் பாகம் வள்ளிநா யகியை
உற்றங் கணைத்தும் உக்கிரமோ டிருத்தி
இரட்டை கவுரி இருபுறத் தசைய
மருட்டனை நீக்கிய மனதொடும் அன்பொடும்
தேவர் தானவர் சித்திவித் யாதரர்
பாவையர் கின்னரர் பன்னகர் முனிவர்கள்

நின்னிடப் புறத்தில் தெய்வயா னையையும்
மன்னி வளர்ந்த வள்ளிநா யகியையும்
பச்சை மயிலும் பரிந்தென் னிருதயத்து
இச்சை யுடனே இனிதமர்ந் தருளே! (39)

வேல்முருகாற்றுப்படை முற்றும்

....

சரவண பவனே என்று நின்னிடத்
துயர உள்ளமுந்து உறுதியோ டுரைத்துச்
சூழநின் றிருதூய மலரேந்திக் கொடுத்து
வாழி யேற்றி மலரடி தொழுதும்
பற்றியடி யார்க்குப் பழம்பொரு ளளித்து
முத்திதர வேணும் முழுமலர்ச் சுடரே!
அமரர் சிறைமீட்ட ஆறிரண்டு தோளும்
தமரக மிகுந்த தண்டையும் தாளும்
குமரன் திருக்கையில் வேலும் சிந்தித்து
நெஞ்சே இருக்கவே போமே இடர்.

அணி முருகாற்று முற்றும். சிவமயம்.

சுவடி எண்.1787

2. அறுகோ ணத்தில் தனிலா றெழுத்தை
உறுக நிறுத்தி நடுஓங் கார
றீங்கார சிறீங்கார மிட்டு
கோண மாறையும் குலவுறீங் காரத்தால்
பூரண வளைத்துப் போற்ற விசைந்து
பொற்கொடி யாகிய தெய்வ யானையைச்
சீரிடப் புறத்தில் உய்ய வைத்துப்
....புயத் தணைத்து உக்கிரமோ டிருந்து
இரட்டைக் கவரி இரு த் தடைய
மருட்டுயர நீக்கி மனத்திலும் ....யிலும்
தேவர் தானவர் சித்தியவித் தியாதரர்
பாவையர் கின்னரர் பன்னகர் முனிவர்
ஓம்சர வணபவ நமாவென்று நின்னுட

உரமுள மந்திர உறுதியோ டுரைத்துச்
சூழநின் திருமால தாய்மலர்க் கொண்டு
வாழியென் றேற்றி மலரடி யிறைஞ்ச
வேண்டிய வரங்கள் விரைந்தருளித் தருளும்
அண்டர்நா யகனே! அறுமுகத் தரசே!
எமதுயிர்த் துணையே! ரட்சிகர்த் தாவே!
நற்குரு பரனே! நாரணன் மருகா!
சற்குரு பரனே! சரவண பவனே!
உமைதரு சுகனே! சிவனருள் முருகா!
நின்னையும் நின்னுடைய தெய்வயா னையையும்
மன்னிய புயத்து வள்ளிநா யகியையும்
பச்சை மயிலையும் பரிந்தெ னிருதயத்தே
என்னிச்சை யின்படி ....

சுவடி எண். ஆர்.எண்.9823

கோண மாறையும் குறைவுறீங் காரத்தால்
புணர வணைத்துப் பொற்கொடி யென்னும்
தெய்வ யானையைச் சீருடன் மருங்கில்
உய்ய வைத்து உயர்புயத் தணைத்து
மற்றுமோர் பாகம் வள்ளிநா யகியை
உற்றங் கணைத்து உக்கிரமோ டிருந்து
இரட்டைக் கவுரி இருமருங் கிசைப்ப
மருள்தனை நீக்கி மனத்தொடும் அன்பொடும்
தேவர் தானவர் சித்திவித் யாதரர்
பாவலர் கின்னரர் பன்னகர் முனிவர்
ஓம்குமர குருபர ஓம்குமர குருபர
ஓம் குமர குருபர குணதர நிசிதர
அமரர் பணிந்திடும் அறுமுகா சரணம்
ஓம்திரி புரபவ ஓம்திக லொளிபவ
ஓம்பரி புரபவ ஓம்சர வணபவ
ஓம்கிருங் கிருங்சிறங்............
சரவண பவசண் முகாநம வென்றுன்
உரமுள மந்திரம் உறுதியோ டுரைப்ப
சூழநின் திருபுரத் தூயமலர்க் கொண்டு
வாழியென் றேத்தி மலரடி இறைஞ்சி

வேண்டிய வரங்கள் விரைந்தவர்க் கருளும்
அண்டரநா யகமே! அமரர்நா யகமே!
அறுமுகத் தரசே! அற்புதக் கொழுந்தே
எனதுயிர்த் துணையே! ரட்சிகர்த் தாவே!
நின்னையும் நின்னுட தெய்வ யானையும்
மன்னிய புயத்து வள்ளிநா யகியும்
பச்சை மயிலும் பதிந்தென் இருதயத்
திச்சைப் படியே இனிதமரந் தருளி
என்னை யாண்டு நின்னருள் அளித்துப்
பொன்னடி வாழ்க்கை நின்னருள் அதனை
அருளே! அருளே! அமுதே அமுதே!
பொருளே! பொருளே! குமரப் புனிதரன்
வஞ்சனை (நெஞ்சன் பொல்லா) மயக்கை எல்லாம்
அஞ்சலென வந்து ஆண்டருள் வோனே!

முருக சரவணபவன் திருவடி வாழ்க

சுவடி எண்: ஆர்.எண். 5364

வேல்முருகாற்றுப்படை

(1-12 அடிகள்)

பொன்னிற மேனியும் அலங்கரிக்கப்பட்ட பெரிய கிரீடமும், ஒளிபொருந்திய ஆறுமுகங்களும் பன்னிரண்டு கண்களும், திருநீறணிந்த நெற்றியும், நீண்ட கைளும், அழகிய வடிவுடைய கூர்மையான மூக்கும், நிறைந்த அணிகலன்களை அணிந்த திருக்கழுத்தும், காதணிகளும், வலிமை பொருந்திய குண்டலங்களை அணிந்திருக்கின்ற செவிகளும், முப்புரிநூல் அணிந்த மார்பும், முழுவதும் மணிகளாலாகிய மாலையும், பன்னிரண்டு கைகளிலும் ஏந்திய ஆயுதங்களும், வெற்றி பொருந்திய வாளும் சக்கரமும், ஒளிபொருந்திய வச்சிராயுதமும், வெண்மை நிறமுடைய கோழியும், பெருமை மிகுந்த பொன்னாலாசிய வளைதடியும், அடியார்க்கு வரமளித்துக் காத்து அருள்கின்ற கரத்தையும், அடைக்கலம் என வருகின்றவர்களை அரவணைக்கும் அபைய கரமும், இருபிளவு பட்ட சூலமும், அம்பும், சரமும் சர்ப்பமும் கைகளில் ஏந்தி விளங்குபவனே!

(13-25 அடிகள்)

சிவந்த காந்தன்மலர் மாலையை மார்பினில் அணிந்து, இடையினில் வெண்பட்டு ஆடையினையும் உடுத்தி, சதங்கை, தண்டை போன்ற கால் அணிகலன்களை அணிந்து, இடக்காலினை மடித்து, வலக்காலினை மகிழ்வுற நீட்டி, சடாட்சர மந்திரத்தைத் துணையாகக் கொண்டு, கோணங்கள் ஆறும் பிரகாசத்துடன் வளைத்து, அந்த ஆறு கோணத்திலும் **ச, ர, வ, ண, ப, வ** என்ற ஆறு எழுத்துக்களையும் பெருமையுடன் நிறுத்தி,நடுவில் ஓங்காரத்தையும் சிறீங்காரத்தையும் அமைத்து, பொற்கொடி தெய்வ யானையை இடப்புறத்தில் சிறப்புற வைத்து, வலப்புறத்தில் வள்ளி நாயகியை அணைத்துள்ளாய்!

(26-30 அடிகள்)

உன்னைத் தங்களது மனத்திலே எண்ணித் தமக்கு ஏற்பட்டுள்ள துயரினை நீக்குவதற்கு உறுதியோடும் அன்போடும் இருந்து, தேவர்களும், அசுரர்களும், பெண்களும், பாணர்களும், கின்னரர்களும், முனிவர்களும் ஓம் சரவணபவ என்னும் உன் மந்திரத்தை மன ஒருமைப்பாட்டுடன் உச்சரித்துக் கொண்டு, தங்களுடைய கரங்களில்

வணங்க,வேண்டியவற்றைவிரைந்து இனிது அளிக்கும் வானோர் தலைவனே! ஆறு முகங்களை உடைய அரசே! எமதுயிருக்குத் துணையானவனே! என்னைக் காத்தருள வேண்டும். இளைவனே! உன் இடப்புறத்தில் உள்ள தெய்வயானையுடனும் நிலைபெற்றுள்ள வள்ளிநாயகியுடனும் பச்சைநிற மயிலுடனும் வந்து என் மனத்தினில் விருப்பமுடன் வீற்றிருந்து அருள்செய்வாயாக!



9. ஒரு முருகாற்றுப்படை

பைரவி வின்பாகக் கைலை இறைவ!
ஆவினன் குடியில் ஆயினன் குடியும்
இடுக்கி இருஞ்சின நடுக்கப் பாடியும்
மீனவர் கனத்தான் கைத்தலை வாழ்த்தலை
வேல்நீண் கைத்தலை நிருப!
மூவர்கள் போற்றுந் தேவர்கள் தேவா!
ஏற்று விபூதி யித்துத விதரு
மேருவளைத் தோய சூர்கொண் டன்றே
மேலா யுதித்த சேலார் விழிச்சி
யேகா வடத்தி நாகா புயத்தி
ஆலால முனிபா லர்வர மார
பேரணி நெருக்கிச் சூரனை மேர்குமுது
சூரனை மோதி மூது சூரு
தாரு வான மேருவுங் கிழித்து
அகோர அகோர சங்காரா!
கோமார பைரவி குமரிகை வீசி
குறைந்தலை களிற நாற்பெரு வெள்ளம்
நள்ளிரு ளாடும் கொள்ளிக் கண்களும்
மேக பாத பூதப் பிசாசு
பலபல பெய்த வகைகு வித்து
பரம சுகத்திதை மகர மெடுத்துப்
பைரவி கோடி பவுரிகொண் டாடி
மிலடி மலடி மிடடியென்னுக்
காடி இடக்கை யென்று மிடுமிடு
மிரட்டடி யென்னுல காலம் பிரமிப்ப
ஆதிவித் தான மூல மூர்த்தி
ஆனருள் குமரா! பரம தேசிகா!
அறுபத்தி நாலு .... ந்தருள்
கார்த்தி கேயா பாலசுப்பிர மணியா!
சூரர் பிறவா சூறைக் காரா!

இந்நூல் சுவடிஎண் 1787 இல் அமைந்துள்ளது. வருமுருகாற்றுப்படையில் காணும் சில பாடலடிகள் இந்நூலில் பயின்று வந்துள்ளன.

வீர துட்சணா சூரர் குந்தர
வீர கீத்திய! வடபத்தி ராயே!
சூழ சக்கர பாணி அரகர
வாரக்க சூரியா ஆதிநா ராயணா!
மூரி மாதவா ....
விண்ணவ ரேற்று மண்ணல்மா மருகா .
வனச மான சகடூர்தி காலி
கலநா யன்மரு கோனே முருக!
வருக வருகஎன் றேற்றுவார் முன்னின்று
ஏற்றுவே னென்முன் னிமைப்பினில் வருக
என்ன எதிர்த்த பேயும் பிசாசும்
பில்லி சூனிமும் எப்பட்ட கிரகங்களையும்
எரிஎரி வேலால் திரிதிரி வேலால்
கட்டு கட்டு முட்டு முட்டு
வெட்டு வெட்டு குலைகு லைந்து
நடுநடுங்கி நாச மாகவே சுவாகா.

ஒரு முருகாற்று முற்றும்.

கந்த சுவாமி துணை.

துணைநூல் பட்டியல்

1. **இலக்கிய வரலாறு**, பூவண்ணன், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதினோறாம் பதிப்பு, ஆகஸ்டு 1992.

2. **கந்தபுராணக்கதைகள்**, எஸ். தமயந்தி, கவிதா அச்சகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, நவம்பர் 1993.

3. **கந்தபுராணம்**, ஆறுமுக நாவலர் (பதிப்பு), வித்தியாநு பாலயைந்திர சாலை, ஐந்தாம் பதிப்பு, பரிதாபி வருடம், வைகாசி மாதம்.

4. **குறுந்தொகை**, உ.வே. சாமிநாதையர் (பதிப்பு) கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1947.

5. **சிலப்பதிகார மூலமும் அடியார்க்கு நல்லாருரையும்**, உ.வே.சாமிநாதையர், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, பத்தாம் பதிப்பு, 1985.

6. **தமிழர் நாகரீகமும் பண்பாடும்**, அ. தட்சிணாமூர்த்தி, ஐந்திணைப்பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, டிசம்பர், 1987.

7. **திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்**, பு.சி. புன்னைவன நாதர் முதலியார் (விளக்க உரை) கழக வெளியீடு, மறுபதிப்பு 1977.

8. **தொல்காப்பியம் (பொருளதிகாரம்) இளம்பூரணர் உரை**. கழக வெளியீடு, முதல் பதிப்பு, 1952.

9. **நவநீதப் பாட்டியல்**, எஸ்.ஜீ. கணபதி ஐயர், எஸ் . கலியாண சுந்தரையர் (பதிப்பு) உ.வே.சாமிநாதையர் நூல்நிலைய வெளியீடு, சென்னை. 1961.

10. **பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும்**, உ.வே.சா. நூல்நிலையம், ஏழாம்பதிப்பு 1980.

11. **பன்னிரு பாட்டியல்**, கா. ரா. கோவிந்தராஜ முதலியார் உரை, கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1949.

12. **பிரபந்த தீபம்**, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1980.

13. **புறப்பொருள் வெண்பாமாலை**, பொ.வே. சோமசுந்தரனார், (விளக்கவுரையுடன்) கழக வெளியீடு, மறுபதிப்பு 1978.

14. **முருகர் கதம்பம்**, புலவர் வீ. சொக்கலிங்கம், ஸ்ரீ வாணிவிலாச அச்சகம், ஸ்ரீரங்கம், 1965. தஞ்சாவூர், சரசுவதி மகால் நூலக வெளியீடு.

15. **முருகனைப் பாடிய மூவர்**, மு. வலவன், முத்தையன் பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு 1985.

16. **முருகன் அல்லது அழகு**, திரு. வி. கல்யாணசுந்தரனார், மெட்ரோ பாலிட்டான் பிரிண்டர்ஸ், பன்னிரண்டாம் பதிப்பு, நவம்பர், 1968.

சொல்லடைவு

(மூலத்தில் உள்ளபடி பக்க எண்கள்)

அகில நாயகன்	29
அகோர சங்கார	45
அகோர வீரன்	22
அங்குசத்தவன்	2
அட்சரம்	38
அடிமலர்	29
அடியவர் மனம்	8
அண்டரண்டம்	26
அண்டருக்கரசு	2
அண்டர்	3
அண்டர் நாயகன்	39
அண்டர் மண்டலம்	26
அணி	34
அணிமுருகாற்றுப்படை	1
அதலம்	24
அந்தம்	9
அபயம்	25, 38
அம்பு	33
அம்புய நாடு	8
அமரர்	9, 25
அமரர் குலநாயகன்	23
அமரர்பதி	13
அமுர்தினி யோகம்	35
அய்யன்	2
அரக்கர்	23
அரம்பையர்	34
அரைத்தாள்	2
அருணகிரி	24
அருமணி	33
அருமுருகா	35
அருள்குமரா	45
அருள் முருகாற்றுப்டை	8
அலங்கல்	34
அலகை	27
அலகைகள்	28
அழல்	39
அற்சுத் அருள்	2
அறப்பெருவெள்ளம்	27
அறுபத்து நான்கு	27, 45
அறுமுகத்தரசு	39
அறுமுகம்	38
ஆதி	9
ஆதிஉமையாள்	34
ஆதி சங்கரர்	22
ஆதித்தன்	3
ஆதிநாராயணன்	29
ஆதிவித்து	28, 45
ஆடை ஆபரணம்	33
ஆடல்பாடல்	34
ஆயுதங்கள்	34
ஆயுதம்	38
ஆரம்	24
ஆரன்	2
ஆராஅமுது	9
ஆலாகாலம்	26
ஆலாலமுனி	45
ஆவலம்	3
ஆவினன்குடி	8, 19, 45
ஆழி	34
ஆறிருதோள்	24
ஆறுநிலை	8
ஆறுமுகம்	3
ஆறுமுகன்	22
ஆறுமுகவன்	33
ஆறெழுத்து	38
ஆனந்தவைரவன்	23
ஆனந்த ரூபன்	22

இச்சை 40
இசை 18
இந்திரன் 2
இட்டகாமியங்கள் 35
இடக்கை 45
இடர் 25
இமைப்பு 29, 46
இமையவர் 19
இயல் முரகாற்றுப்படை 12
இராவணன் 22
இருகண் 13
இருதயம் 40
இருபிறப்பாளன் 12
இருபுயம் 33
இலங்காபுரி 22
இறைவன் 18
ஈசன் 2 ,3
ஈஸ்வரருத்திரன் 22
ஈஸ்வரவடிவு 2
ஈர்தலைச் சூலம் 38
ஈராறு உறுப்பு 3
ஈராறுகை 3
உக்கிரம் 39
உந்து 2
உமைபுதல்வா 35
உயிர்த்துணை 39
உரிமை 3
உலகம் 8, 28
உறுதி 39
எண்டிசை 3
எண்டிசைத்திகிரி 2
எம்பெருமான் 4
எரிகனல் 2
எரிவாழ்வு 2
எழுகடல் 1
எழுச்சி 2
எழுதிறத்தீசன் 2
எழுவர் 24
எல்லை 27
ஏரகம் 8, 19, 35
ஏற்றுவார் 46
ஐந்துகரத்தோன் 25
ஒட்டியாணம் 34
ஒருபிறப்பு 12
ஒருமுருகாற்றுப்படை 45
ஒன்பது வாசல் 12
ஓங்காரம் 38
கங்கடம் 34
கங்கைமைந்தன் 8
கச்சு 24
கச்சுடை மருங்கு 34
கட்டாரி 33
கடகம் 3
கடகரி 12
கடம்பன் 9, 18
கடம்பு 13
கடவுள் 12
கண்ணன் மருகன் 8
கணங்கன் 3, 34
கணபதிக்கிளையோன் 12
கணபதி சோதரன் 8
கணைக்கால் 2
கந்தசுவாமி 12
கந்தன் 12, 13, 18
கந்தா 9
கபடசூரன் 18.
கபாலம் 23
கமலபாதம் 8
கமலா 26
கரடி 28
கரம் 34
கருணை 8, 19
கருமேனி 2
கல்லப்பதி 2
கலகம் 28
கல நாயன் 46

கலைகள் 34
கவரி 27, 34
கழல் 25
கழஏற்றல் 18
கள்ளக்களிப்பு 27
கற்பகக்கா 1
கற்பகம் 26
கனகுரு 18
காது 13, 27
கார்த்தி 27
கார்திகேயன் 25
கார்த்திகேயா 45
கார்த்திகை 22, 33
கார்த்திகை சிறுவன் 3
கால காலன் 25
காலாழி 26
காளமேகம் 27
காளி 28, 34
காளி நாயகன் 29
காற்று 19
கிண்கிணி 24, 34
கிம்புரர் 18
கிரகங்கள் 46
கிரீடம் 33
கின்னரர் 39
கீற்றிகன் 18
குக்குடம் 24, 38
குஞ்சரமுகத்தோன் 25
குண்டலக்குழை 24
குண்டலங்கள் 38
குண்டலநீலி 26
குதிரைமுகம் 13
கும்பம் 25
குமரர் 4
குமரி 27, 45
குராநிழல்கொற்றவன் 13
குழை 38
குறங்கு 2
குன்றம் 2
குன்றுதோராடல் 8
குன்றெறிகுமரன் 13
கூத்தன் 4
கூரியமூக்கு 38
கூளி 28,34
கெசமுகாசுரன் 25
கைலைஇறைவ 45
கொங்கை 25
கொண்டல் 25
கொற்றக்கொடி 34
கொள்ளிக்கண் 46
கொள்ளிகணம் 27
கொன்றை 3
கோசறுபரமன் 29
கோணம் ஆறு 38
கோப்பு 33
கோமளக்கன்று 4
கோலாகலத்தி 26
கோழிப்பதாகை 24
கௌரிபாலன் 18
சக்கரபாணி 2, 45
சக்கரம் 38
சக்கிராயுதம் 18
சகடுமோதினன் 29
சகல பாவம் 35
சகல மந்திரம் 23
சகல ரூபி 29
சகல விஷம் 35
சகல வியாதி 35
சங்குசக்கரம் 33
சங்கையோன் 12
சடையோன் 12
சண்டாமிருதம் 1
சண்முகரூபம் 18
சண்முகன் 9, 33
சதங்கை 34, 38
சதாசிவன் 33

சந்திரன் 1, 2, 3
சந்தன குங்குமம் 34
சந்தனம் 25
சப்தரிஷி 2
சமணர் 18
சயலொளி 33
சர்பம் 38
சர்வவினாசம் 23
சரம் 38
சரவணநதி 18
சரவணபவன் 9, 33
சரவணபவா 35
சரவணன் 34
சரவணை 2
சிந்தாமணி 9
சிவநெறிச் செல்வம் 1
சிவசுப்பிரமணியா 1
சிரித்த முகம் 33
சிரீங்காரம் 38
சிற்றிடை 34
சிறகு 24
சிறுகுடர் 28
சிறுபிறை 3
சிறை 25
சிஷ்டபரிபாலனம் 35
சீரலைவாய் 8, 19, 35
சுகந்தா 1
சுடரொளி மேனியான் 18
சுடர்மணி 2
சுதலம் 24
சுப்பிரமணிய சுவாமி 34
சுப்பிரமணியன் 22
சுமுகன் 18
சுருதி 2
சுவாகா 46
சூர் 13
சூரர் 28, 34, 45, 46
சூரன் 8, 27, 45
சூரன் உடல் 3
சூரன் மார்பு 34
சூரிகை 33
சூலம் 3, 27
சூனியம் 35
செங்குரவம் 3
செச்சைத்தாங்கல் 24
செச்சை மாலை 38
செட்டி 9
செந்தில் 35
செந்தில் கந்தா 35
செந்தில் பதி 19
செந்தில் மன்னவன் 24
செந்தூர நுதல் 33
செம்பத்து 34
செம்புயத்தமன் 25
செய்யசேவகன் 13
செய்யூர்க்கந்தன் 19
செல்வம் 19
சென்னியங்கிரி 35
சென்னியன் 6, 19
சேய்முருகாற்றுப்படை 18
சேவலம் கொடி 3
சேலார் விழிச்சி 26, 45
சேனாபதி 9
சொட்டை 33
சொற்கந்தா 1
சோதி 9, 25
ஞாலம் 3
ஞானச்சுடர் 9
தண்டமிழ்மறை 1
தண்டை 24
தண்டைகள் 38
தண்டைக்கால் 35
தண்டு 3
தணிகையான் 19
தட்சணம் 22
தடமணி 34

தந்தி 25
தந்தைதாய் 34
தராதலம் 1
தவளமேனி 3
தவநெறிசைவம் 1
தாமரைத்தடாகம் 1
தாளி 27
தானவர் 39
திகலொளி 33
திரிபுவனம் 22
திரியம்பதி 8
திருக்கழுத்து 38
திருக்கை 3
திருத்தணிக்குன்றம் 8
திருத்தாள் 9
திருநீற்றுக்காப்பு 13
திருப்பழனம் 19
திருப்பெருங்குன்று 35
திருமதிள் 19
திருமார்பு 2
திருமால் 3
திருமால் மருகன் 13
திருமேனி 34
திருவாவினன் குடி 35
தீபம் 34
துயர் 39
துஷ்டதேவதைகள் 35
துஷ்டநிக்கிரகம் 35
தெய்வயானை 8, 13, 33, 34, 35
தெய்வம் 23
தெய்வஸ்ரீகள் 34
தென்பரங்குன்று 8
தேசிகசூரன் 28
தேசிகன் 8
தேரூர் வீதி 19
தேவர் 34,39
தேன்மாகுழவி 2
தொங்கல் 34
தொந்தகாது 3
தொழுகடல் சுருதி 2
தோகைமயில் 3
தோடு 3
நஞ்சணிகண்டன் 3
நடுக்கப்பாடி 45
நதி 18
நலம்புரியோன் 2
நவமணி 19, 33
நள்ளிருள் 27, 45
நன்னிலம் 3
நாக கங்கணம் 22
நாகா புயத்தி 45
நாசம் 46
நாதர் 18
நாமகள் 2
நாரதர் 18
நான்முகன் 2, 3
நித்திலம் 2
நிதலம் 24
நிமலன் 9, 103
நிராமயன் 18
நீர்த்துளி 35
நீலம் 2
நீலமேனியன் 29
நீள்கை 38
நீறணிநெற்றி 38
நூல் 24
நெஞ்சு 1
நெற்றி 2
பகாரமொழிச்சி 26
பச்சைமயில் 40
பசுபதிக்கிறைவன் 18
பத்துத்திக்கு 12
பதம் 38
பட்டையம் 33

பதுமபீடத்தன் 18
பயன் 4
பரங்குன்றம் 1
பரதவச்சலன் 18
பரமதேசிகா 45
பரம ராகம் 1
பராபரமூர்த்தி 19
பரிசை 33
பருதி 2
பலிச்சோறு 3
பவளக்கொத்து 2
பவளம் 3
பவளமேனி 13
பவுரி 45
பழம்பொருள் 13
பழமுதிர்ச்சோலை 8, 19, 35
பறவை 34
பன்னிருகண் 24
பன்னிருகரத்தன் 18
பன்னிருகரம் 33, 38
பன்னிரு காலன் 33
பன்னிரு குழை 33
பன்னிருகை கோமான் 1
பன்னிரு தோள் 3
பாசக்கரம் 3
பாணர் 39
பாதாளம் 24
பாம்பணி 3
பார்வதி 2
பாலசுப்பிரமணியா 45
பாவையர் 39
பிசாசு 46
பிஞ்சணிபிறையன் 3
பிணி 2
பிதா 18
பிரணவபஞ்சாட்சரம் 18
பிரதாபம் 24
பிரமராட்சதர் 23
பிரேதம் 23
பில்லி 35
பில்லிசூனியம் 46
புண்டரீகம் 24
புலித்தோல் 3
புனம் 2
புனிதன் 8
புஷ்பமாரி 34
புஷ்பாபுரத்துறை 26
பூங்கொடி 4
பூசை 1
பூதப்படை 27
பூதப்பிசாசு 27, 34
பூதம் 3, 22
பூமகள் 2
பூமலர்ப்பொழில் 1
பெருமறை 2
பெருமை 19
பெருவிரல் 34
பெருவெள்ளம் 45
பேய் 46
பேரணி 27,45
பேரன்பர் 2
பைரவர் 28
பைவாளரவம் 3
பைரவி 27, 38, 45
பெருமுருகாற்றுப்படை 22
பொருள் 4
பொற்கொடி 38
பொற்பாதம் 1
பொன் 34
பொன்நூபுரர் 2
பொன்னம் 2
பொன்னிறமேனி 38

போரூர் 19
மகபதி 8
மகரம் 35
மகாதலம் 24
மகிபர் 2
மட்டவில் 65
மணம் 2
மணி 24
மணியாரம் 13
மணிவடம் 38
மத்தாளம் 35
மதுரை 18
மதுரைநக்கீரர் 13
மந்திரம் 39
மயில் 3, 61
மயில் வாகனன் 8, 22,34
மயில் வாகனத்தன் 18
மயூரவாகனன் 22, 33
மரகத வைரம் 2
மருகா 29, 46
மருகோன் 46
மருங்கு 24, 35
மருள் 39
மலரடி 39
மலரோன் 2
மலைச்சடர் 13
மழுவாள் 3
மறரி 2
மன்னன் 24
மனம் 24
மாசறுசோதி 1, 2
மாதவன் 2, 29
மாந்தர் 25
மாமுடி 38
மார்பு 34,38
மாரநாயகன் 19
மாருதம் 18
மாலாமதத்தி 26
மீனவர் 45
முக்கண் மூர்த்தி 26
முக்தி 13
முடி 3
முந்நூல் 38
முப்பது முக்கோடி தேவர் 34
முருகன் 13,18 ,34
முருகா 35
முருகாற்றுப்படை 13
மூவிருமுகம் 13
முனிகள் 18
முனிபாலன் 26
முனிவர் 34, 39
மூர்த்தி 28
மூலமூர்த்தி 45
மூவர்கள் 45
மூஷிகம் 26
மேரு 27, 45
யோகாவடத்தி 26, 45
யோகமுகம் 24
ரிஷிகள் 34
ரோமம் 2
ஸ்ரீராமபத்திரன் 22
வகாரமறைச்சி 26
வச்சிரம் 3, 38
வச்சிராயுதம் 33
வசீகரன் 35
வஞ்சனை 35
வடதமிழ் 13
வடபத்திரா 46
வரசுப்பிரமணியன் 25
வரதம் 38
வருமுருகாற்றுப்படை 24,33
வயிறு 2
வரிசிலை 8
வருணன் 2

வழுவறுவானம் 1
வள்ளி 13, 18, 24, 33
வள்ளிநாயகி 39, 40
வள்ளிபாகம் 4
வன்னி 3
வன்னிமண்டலம் 26
வன்னிமேரு 25
வனம் 13
வாக்கு 4, 13
வாத்தியங்கள் 34
வாய் 38
வாருதி மருகன் 8
வாள் 38
வானவர் 2
விக்கினவினாசம் 23
விக்னேசுபரன் 2
விசாகன் 9, 13
விண்ணவர் 46
விணாயகன் 3
வித்யாதரர் 39
விதலம் 24
விந்து 2
விநாயகன் 26
விபூதி 45
விமலன் 9
விமலா 26
வில் 3, 33
விழிபன்னிரண்டு 38
வினாயகன் 3
வினைப்பகை 9
வீசியவெயில் 1
வீரக்கன்னியர் 34
வீரத்தண்டை 34
வீரதுட்சணா 46
வீரபத்திரன் 22
வீரப்பிரதாபன் 13
வெண்துகில் 38
வெண்முடி 33
வெருவாமுனம் 29
வெள்ளிமாமாலை 18
வெள்ளிமேனி 27
வெற்புனம் 26
வெற்றிச்சிலம்பு 34
வெற்றிவேல் 18
வேகம் 18, 27
வேதநாயகன் 22
வேதவொலி 24
வேந்தா 9
வேல் 3, 24, 33, 34, 38, 46
வேல்முருகாற்றுப்படை 38
வேலாயுதம் 23
வேலாயுதன் 26
வேள்வி 12
வைர அபிசேகரன் 33
வைரவாள் 33